Registered as a NewsPaper

பொதுசன நூலகம்

விலை ரூபா-7.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-12

S.M கோல்ட் ஹவுஸ்
வவுனியா நகரில்
அசல் 22 கரட்
தங்க நகைகளை
உங்கள்
விருப்பத்திற்கேற்ப
தெரிவு செய்து
பெற்றுக்கொள்ள
S.M கோல்ட் ஹவுஸ்
இல:-46A, தர்மலிங்கம் வீதி,
வவுனியா.
T.P: 024-222 4247



நாதம் -15 | திருவள்ளுவர் ஆண்டு- 2035 | புரட்டாதி-26 | 12-10-2004 | செவ்வாய்க்கிழமை | ஓசை -237

### கருணாவுடன் இயங்கிய தேசவிரோதிகளான

# 'மார்க்கன்' குழுவைச் சேர்ந்த இருவர்

# புலிகளின் அதிரடித்தாக்குதலில் பலி!

### பொலநறுவை எல்லைப்பகுதியில் சம்பவம்

**நேற்று முன்தினம் நள்ளிரவு 12 மணியளவில் வெலிக்கந்தை எல்லைக்கிராமமான நாகஸ்தனையில் தமிழீழ விடுதலைப்புலிகள் மேற்கொண்ட அதிரடித் தாக்குதலில் தேசத்துரோகி கருணாவின் மார்க்கன் குழுவினர் இருவர் கொல்லப்பட்டதுடன் ஐவர் காயமடைந்துள்ளார்கள்.**

இத்தாக்குதல் சம்பவம் குறித்து விடுதலைப்புலிகளின் மட்டு-அம்பாறை மாவட்ட அரசியல் துறையினர் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

சென்ற 05.10.2004 செவ்வாய்க்கிழமை இரு முஸ்லிம்களை கட்டுவன்விலவில் இம் மார்க்கன் குழுவினரே படுகொலையை புரிந்தவர்களாவர். இக் குழுவினர் இப்படியான மிலேச்சத்தனமான செயல்களில் ஈடுபட்டு தமிழ் - முஸ்லிம் சமூகங்களிடையே இன ஐக்

(12ஆம் பக்கம் பார்க்க)

## கப்டன் பார்தீசன் (யூட்) கொலைக்கு விடுதலைப்புலிகள் கண்டனம்

கப்டன் பார்தீசன் (யூட்) கொலையை தமிழீழ விடுதலைப் புலிகள் கண்டித்துள்ளனர். இது தொடர்பாக மட்டு அம்பாறை மாவட்ட அரசியல் துறையினர் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

தமிழ் தேசியத்தைக் காட்டிக் கொடுத்து தேசிய விடுதலைப் போராட்டத்தைச் சிதைத்து மழுங்கடிக்கும் செயலில் இறங்கியுள்ள தமிழத்தேசியத் துரோகி கருணாவின் அடிவருடியாகிய தமிழினத் துரோகி வித்தகனால் அக்கரைப்பற்று நகரில் உள்ள பேருந்து நிலையத்தில் வைத்து9ஆம்திகதிகாலை மு.ப 10.48 மணியளவில் கைத்துப்பாக்கியால் சுடப்பட்டு கப்டன் பார்த்தீசன் (யூட்) வீரச்சாவைத் தழுவிக் கொண்டார்.

தேசத்துரோகி கருணாவும், அவரது கும்பலும் மட்டு. அம்பாறை மாவட்டங்களில் சில முஸ்லிம் அரசியல் கட்சி ஆதரவாளர்களின் பாதுகாப்பில் இருந்து கொண்டு இந்த நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர். இதைச் சமாதான விரும்பிகளான தமிழீழ விடுதலைப்புலிகள் வன்மையாகக் கண்டிக்கின்றனர். அத்துடன் இத்

(12ஆம் பக்கம் பார்க்க)

### வீரச்சாவு

09-10-2004 அன்று மட்டு-அம்பாறை மாவட்ட அக்கரைப்பற்றுப் பகுதியில் தேசவிரோதிகளின் தாக்குதலின்போது போராளி ஒருவர் வீரச்சாவடைந்துள்ளார்.

□ கப்டன் யூட் / பார்தீசன்.

(பளவசிங்கம், ஜெயகரன் - நூலக வீதி 2ஆம் குறிச்சி தம்பிலுவில் அம்பாறை) என்ற போரா

(12ஆம் பக்கம் பார்க்க)

## லெப்.கேணல் விக்ரரின் நினைவு நாள் நிகழ்வுக்கு பொலிசார் கட்டுப்பாடு

லெப்.கேணல் விக்ரர் அவர்களின் 18 ஆவது ஆண்டு நினைவு நாளான இன்று விக்ரர் அவர்களின் திருவுருவச்சிலை அமைப்பதற்கு மன்னார் மக்களினால் எடுக்கப்பட்டுள்ள முயற்சிகள் சிறிலங்காப் பொலிசாரினாலும், இராணுவத்தினராலும் தடை செய்யப்பட்டுள்ளது. பொலிசாரினதும், இராணுவத்தினரதும் இச்செயல்களைக் கண்டித்து ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடுமளவுக்கு நிலைமை உள்ளது.

(12ஆம் பக்கம் பார்க்க)



### உருவப்படம் இணைப்பு

மூத்த தளபதியும், மத்திய குழு உறுப்பினருமான லெப். கேணல் விக்ரர் அவர்களின் வர்ணப்படம் இன்றைய ஈழநாதம் நாளேட்டுடன் இணைக்கப்பட்டுள்ளது.

## மன்னாரில் ஹக்கீமின் வருகைக்கு முஸ்லிம் மக்கள் எதிர்ப்பு

மன்னாரில்முஸ்லிம் கிராமங்களுக்கு வருகை தந்த முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீமிற்கு முஸ்லிம் மக்கள் தமது எதிர்ப்பைத் தெரிவித்துள்ளனர்.

நேற்றுப் பிற்பகல் 2 மணிக்கு தாராபுரம் கிராமத்தில் குழுமிய முஸ்லிம் மக்கள் வீதி மறியற் போராட்டம் நடத்தியும் கறுப்புக் கொடி காட்டியும் வீதிகளில் குப்பைகளைக் கொட்டியும் தமது எதிர்ப்பை வெளிப்படுத்தினர். அதேவேளை வீதியில் ரயர்கள்போட்டு எரிக்கப்பட்டன. (மி)

## மல்வத்த பீடாதிபதியுடன் தமிழ்க் கூட்டமைப்பினர் சந்திப்பு

### எதிர்த்து கண்டியில் ஆர்ப்பாட்டம்

தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள் மல்வத்த மகாநாயக்கர் திப்பட்டுவாவே சிறி சுமங்கல தேரரை நேற்று சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளனர். இன்றைய சந்திப்புத் தொடர்பாக கருத்து வெளியிட்ட பாராளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிறேமச்சந்திரன் இச்சந்திப்பு சுமூகமாக இடம்பெற்றதாகவும், ஐக்கிய இலங்கைக்குள் சமஷ்டிமுறையிலான தீர்வை எட்டுவதற்கான முதற்படியாகவே இடைக்கால தன்னாட்சி அதிகார சபையை விடுதலைப் புலிகள் கோருவதாக தாம் சுட்டிக்காட்டிய

(12ஆம் பக்கம் பார்க்க)



ஆர்ப்பாட்டம் நடத்தியோர்

## விதார் ஹெல்கேசன், ரணில் இந்தியத் தலைவர்களுடன் பேச்சு

நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கேசன் அவர்களும் சிறிலங்காவின் முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அவர்களும் நேற்று இலங்கையின் தற்போதைய நிலவரம் குறித்து இந்தியத் தலைவர்களுடன் கலந்துரையாடியுள்ளனர். கடந்த ஏப்ரலில் பொதுத் தேர்தலில் தனது பதவியை இழந்த பின் முதல் தடவையாக இந்திய விஜயத்தை மேற்கொண்டிருக்கும் ரணில் விக்கிரமசிங்க இந்திய வெளிவிவகார அமைச்சர் நட்வர் சிங்கை சந்தித்து நின்று போயுள்ள சமாதான முயற்சிகள் குறித்து சுருக்கமாக விளக்கினார்.

இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங், காங்கிரஸ் கட்சித் தலைவர் சோனியாகாந்தி, எதிர்க்கட்சித் தலைவர் எல்.கே. அத்வானி மற்றும் முன்னாள் பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பாய் ஆகியோரை ரணில் விக்கிரமசிங்க இன்று சந்திக்கின்றார். அத்துடன் முன்னாள் பிரதமர்களான ஐ.கே. குஜ்ரால், பி.வி.

(12ஆம் பக்கம் பார்க்க)

### சமாதானப் பேச்சுவார்த்தைகளில்

## இந்தியாவைக் கண்காணிப்பாளராக செயற்படவைக்க சனாதிபதி விருப்பம்!

(கொழும்பு)

சமாதானப் பேச்சுவார்த்தைகளில் இந்தியாவைக் கண்காணிப்பாளராகச் செயற்படுவதற்கு சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க விருப்பம் கொண்டுள்ளதாகக் கொழும்பு அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

நோர்வே ஏற்பாட்டாளராகத் தொடர்ந்து செயற்படும் அதேவேளை கண்காணிப்பாளர் நிலையில் இருந்து இந்தியா செயற்படுவது பாதுகாப்பானதென சந்திரிகா கருதுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதனை ரணில் எதிர்ப்பதற்கான வாய்ப்பில்லை எனவும் சனாதிபதி சந்திரிகா நம்புவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை இந்தியாவும் இலங்கை இனப்பிரச்சினையில் முற்றிலுமாக ஒதுங்கியிருக்கும். கொள்கையைக் கைவிட்டு இனப் பிரச்சினை விடயத்தில் சற்று ஆர்வம் காட்ட முற்பட்டுள்ளதாக வும் இராஜதந்திர வட்டாரத்தில் பேசப்

(12ஆம் பக்கம் பார்க்க)

## குழுமோதலால் பலர் காயம்

வவுனியா பூந்தோட்ட நலன்புரி நிலையத்தில் இடம் பெற்ற குழு மோதலில் பலர் காயம் அடைந்திருப்பதாக வவுனியா பொலிசார் தெரிவிக்கின்றனர் இந்த சம்பவத்தில் காயம் அடைந்த 5 பேர்வரை வவுனியா பொது மருத்துவமனையில் சிகிச்சை பெற்று இருப்பதாகவும் வைத்திய சாலை பொலிசார் தெரிவிக்கின்றனர் இது இவ்வாறு இருக்க அண்மை நாட்களாக மீண்டும் குழு மோதல்கள் இடம் பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (21)


**யாழ்ப்பாண மாநகரசபை**

கள்ளியங்காடு பொதுச்சந்தை கட்டடத்தொகுதிக்கான கேள்விகோரல் பின்வருமாறு திருத்தப்படுகின்றது

கள்ளியங்காடு சந்தைக்கடைகளை குத்தகைக்கு வழுங்குவதற்கான

**கேள்வி அறிவித்தல்-2004**

மேற்படி அறிவித்தல் "நல்லூர் செங்குந்தா பொதுச் சந்தைக்கடைகளை குத்தகைக்கு விங்குவதற' கான கேள்விஅறிவித்தல்2004" என மாற்றம் செய்யப்பட்டுள்ளது. என்பதனை அனைவருக்கும் அறியத்தருகின்றேன்.

கலாநிதி க.குணராசா
மாநகரசபை ஆணையாளர்
யாழ்ப்பாணம்

(சி-10485)


## ஆழ ஊடுருவித் தாக்கும் படையணி கலைக்கப்படவில்லையாம்

– சிறிலஇராணுவத்தளபதி கூறுகிறார்

ஆழ ஊடுருவித் தாக்கும் படையணி கலைக்கப்பட்டதாக வெளியான செய்தியினை இராணுவத் தளபதி மறுத்துள்ளார். கடந்த சில தினங்களுக்கு முன்னர் இராணுவ புலனாய்வாளர்களின் செயற்றிறன் மிக்கதான அழ ஊடுருவித் தாக்கும் படைப்பிரிவு கலைக்கப்பட்டதான செய்தி வெளியாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது. இராணுவத் தளபதியின் உத்தரவின் பேரிலேயே இந்தப் படையணிப் கலைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டிருந்த போதிலும் இதனை இராணுவத் தளபதி சாந்தகோட்டேகொட மறுத்துள்ளார். விசேட அதிரடிப்படை மற்றும் தாக்குதல் படைப்பிரிவின் சிறப்புமிக்க சிப்பாய்களைக்கொண்டு உருவாக்கிய ஆழ ஊடுருவித் தாக்கும் படைப்பிரிவைக்கலைக்கும் தேவை எதுவும் ஏற்படவில்லை என்றும் சாந்த கொட்டே கொட தெரிவித்துள்ளார். (32)

## ஆங்கிலப்பயிற்சி நெறி

சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையால் நடத்தப்பட்டு வரும் ஆங்கிலப் பயிற்சிநெறிக்குப் புதிதாக மாணவ, மாணவிகள் உள்வாங்கப்படவுள்ளனர். இக்கற்கை நெறியைத் தொடர்ந்து சான்றிதழ் பெறவிரும்பும் உயர்தரக்கல்வியைத் தொடரும் மாணவர்கள் மாணவர் பேரவையில் விண்ணப்பப்படிவத்தைப் பூர்த்திசெய்து வழங்கிய பின் உள்வாங்கப்படவுள்ளனர். இக்கற்கை நெறியானது முற்றிலும் இலவசமாக நடைபெறுவதுடன் வாசிப்பு, எழுத்து, பேச்சு ஆகிய திறமை அடிப்படையிலேயே சான்றிதழ்களும் வழங்கப்படும் என சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை அறிவித்துள்ளது.

## கலந்துரையாடல்

(அலுவலகசெய்தியாளார்)

யோகர் சுவாமிகள் திருவடி நிலைய ஆன்மீக யாத்திரையும், நூல் வெளியீட்டு விழா தொடர்பான கலந்துரையாடல் நாளை பிற்பகல் 3.00 மணிக்கு கிளிநொச்சி மாவட்டச் செயலக மாநாட்டு மண்டபத்தில் நடை பெறவுள்ளது.

இக்கலந்துரையாடலில் கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள சகல திணைக்களத் தலைவர்கள் மற்றும் சகல ஆலயங்கள், அறநெறிப் பாடசாலைகள்,இந்து சமய நிறுவனங்களின் தலைவர் செயலாளர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளும் வண்ணம் கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரச அதிபர் நா.வேதநாயகம் வேண்டுகை விடுத்துள்ளார். (சோ.கு)

## 31ஆம் நாள் நினைவு அஞ்சலி

மண்ணில் 06 * 03 * 1927



விண்ணில் 13 * 09 * 2004

**திரு.ஆறுமுகம்-பேரின்பநாயகம்**

(பேரா)

முன்னாள் விரிவுரையாளர் - குண்டசாலை விவசாயக் கல்லூரி, விவசாய பணிப்பாளர் சிறந்த ஆற்றலும் துணிவும் மிக்கவர் தமிழ் பேசும் மாணவர்களுக்குக் காப்பரனாக விளங்கியவர் அன்னாரின் ஆத்மாசாந்தியடைய பிரார்த்திக்கின்றோம். எமது இல்லத்தில் 13.09.2004 அன்று நடைபெறும் நிகழ்வில் கலந்துகொள்ளுமாறு நண்பர்கள், உறவினர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்கின்றோம்.

கௌசாம்பிகை - பேரின்பநாயகம்
T.P.0776144892

ஞானந்தோட்டம்புலோலி தெற்கு
பருத்தித்துறை

(5169)

## வரிவிளம்பரம்

**விற்பனைக்குண்டு**

49-தொடர் இலக்கமுள்ள உழவு இயந்திரமும் பெட்டியும் விற்பனைக் குண்டு தொடர்புக்கு:- இல.09, 4ஆம் குறுக்கு, 8ஆம் வாய்க்கால், உருத்திரபுரம். (4924)

## காணிகள் விற்பனைக்குண்டு

767 இலக்கமுடைய மூன்று ஏக்கர் வயல்காணியும், 767 இலக்கமுடைய இரண்டேக்கர் மேட்டுக்காணியும் நிரந்தரப் பயிர்களுடன் கிணறு, மலசலகூடம் வீட்டுடன் வீட்டுக்குரிய தளபாடங்களுடன் ஆறுமுகம் வீதி வட்டக்கச்சியில் விற்பனைக் குண்டு விலை பேசித்தீர்க்கலாம்

க.சி.குமாரசாமி

(5168)

## காணாமல் போய்விட்டார்



வள்ளுவர்புரம் விசுவமடுவை வசிப்பிடமாகக் கொண்ட வரும் விசுவமடு மகாவித்தியாலயத்தில் கல்வி கற்பவருமான (வயது 14) முனியாண்டி டிலக்சனா 24.09.2004 வெள்ளிக்கிழமையிலிருந்து காணமல் போய் விட்டார். இவர் கடைசியாக வீட்டிலிருந்து செல்லும் போது றோஸ் கலர் பிளவுஸ் செவ்விளனி செக் ஸ்கேட் அணிந்து இருந்தார். அத்துடன் இவர் பொது நிறம் உடையவர்.

இச்சிறுமியை யாராவது கண்டால், எங்காவது நிற்பது தெரிந்தால், உடனடியாக விசுவமடு காவற் பணிமனைக்கு நபரை ஒப்படைக்கும் படியாக அல்லது தெரியப்படுத்தும் படியாக உங்களை அன்பாகக் கேட்டு நிற்கின்றோம்.

தகவல்
பெற்றோர்

(5172)

## சாவு அறிவித்தல்

### நாகமுத்தன் ஐயாத்துரை

நெடுந்தீவு 10 ஆம்வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட நாகமுத்தன் ஐயாத்துரை (ஓய்வு பெற்ற வைத்திய சாலை ஊழியர்)அவர்கள் 11-10-2004 அன்று சிவபதமடைந்து விட்டார், அன்னார் கண்மணியின் அன்புக் கணவரும்,யோகேஸ்வரி, பேரின்பநாயகி, மலர்விழி,(ஆதார வைத்தியசாலை பருத்தித்துறை) சிவகுமார் (லண்டன்)ஆகியோரின் பாசமிகு தந்தையும், சுப்பிரமணியம்,காலஞ் சென்ற அமுதலிங்கம், சிவகுமாரன்(ஆதார வைத்தியசாலை,பருத்தித்துறை), உமா(லண்டன்)ஆகியோரின் அன்பு மாமனாரும், அமரர் கணபதிப்பிள்ளை,அமரர் முருகேசு,சின்னம்மா,அமரர் சுப்பிரமணியம், சுரேஷ் ஆகியோரின் அன்புச் சகோதரனும், பகீரதன்,(லண்டன்) சிவாகரன், துளசிதரன், சங்கீதா, துசிதா,வருணன்,அருள்மொழி ஆகியோரின் பாசமிகு தாத்தாவும் ஆவார்.அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:-
**இ.சிவகுமாரன்**
**(மருமகன்)**
ஆதார வைத்தியசாலை,
பருத்தித்துறை

**10ஆம் வட்டாரம்**
**நெடுந்தீவு.**

(சி-10484)

## சாவு அறிவித்தல்

### கந்தையா காமாட்சி

நெடுந்தீவு மேற்கு 2ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், முத்தையன்கட்டு வலதுகரையை வதிவிடமாகவும் கொண்ட அமரர் கந்தையா அவர்களின் அன்பு மனைவி கந்தையா காமாட்சி அவர்கள் 11-10-2004 திங்கட்கிழமை அமரராகிவிட்டார். அன்னார் காலம்சென்றவர்களான பத்தினிப்பிள்ளை, கந்தப்பு, கனகராசா (பிறப்பு, இறப்புப் பதிவாளர்) பொன்னம்மா, கமலம் (இந்தியா) ஆகியோரின் அன்புச் சகோதரியும், அமரர்களான இராமனாதர், சுப்பிரமணியம், இராமனாதர் (கொழும்பப்பா) ஆகியோரதும், ஓய்வுபெற்ற ஆசிரியர் தங்கம்மா, தெய்வானை, கண்மணி ஆகியோரின் மைத்துனியும், கௌசலாதேவி, சிவபாலசிங்கம் (நெடுந்தீவு), லோகராசா (பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் முத்துஜயன்கட்டு) வசந்தாதேவி (பாண்டியன் குளம்),தவராசா தவப்புதல்வன் (அரிசிஆலை அரியாலை), புஸ்பவதி ஆகியோரின் அன்புத்தாயாரும், மருதையினார் பரமேஸ்வரி, சிவபாக்கியம் தியாகராசா, மனோறஞ்சிதம், மகேந்திரராசா ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் முத்துஜயன்கட்டு, வலதுகரை, 2ஆம் படிவத்தில் அமைந்துள்ள அன்னாரது இல்லத்தில் 12.10.2004 ஆம் திகதி நடை பெற்று பிற்பகல் 2 மணிக்குப் பூதவுடல் தட்டயன்மலை மயானத்தில் தகனம் செய்யப்படும் இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:-
**க.லோகராசா**
**மகன்**

(5171)


**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்**

**கேள்விப் பத்திரம்**

**விடைப்புத்தகங்கள், விடைத்தாள் அச்சிடுதல்**

விடைப்புத்தகங்கள் / விடைத்தாள்கள் அச்சிடுவதற்கு அனுபவம் உள்ள அச்சகரிடம் இருந்து கேள்விப் பத்திரங்கள் கோரப்படுகின்றன.

| | |
|---|---|
| விடைப்புத்தகங்களின் எண்ணிக்கை | 40,000 புத்தகங்கள் |
| விடைப்புத்தகங்களின் பக்கங்கள் | 12 பக்கங்கள் |
| விடைத்தாள்களின் எண்ணிக்கை | 200,000 தாள்கள் |
| அளவு | 30 செ.மீ. X 22 செ.மீ. |
| காகிதாதி வகை | 70 கிராம் கென்யோ பாங்க் |

01) கேள்விகளுக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட உதவி நிதியாளர் / வழங்கல் பகுதியில் தொடர்பு கொண்டு மாதிரியைப் பார்வையிடலாம்.

02) கேள்விப் பத்திரங்களுக்கு விண்ணப்பி போர் மீளளிக்கப்பட முடியாத வைப்புப் பணமாக ரூபா 250,00 ஐயும் மீளளிக்கத்தக்க வைப்புப் பண க ரூபா 5000,00 ஐயும் பல்கலைக்கழகக் காசாளரிடம் செலுத்தி அதற்கான பற்றுச்சீட்டுடன் கேள்விப்ப திரங்களை 18-10-2004 அன்று காலை 10.00 மணிக்கு முன்னர் நிதியாளர் அறையிலுள்ள கேள்விப்பத்திரப் பெட்டியில் தபால் மூலமாகவோ அன்றேல் நேரடியாகவோ சமர்ப்பித்தல் வேண்டும். கேள்விப்பத்திரக் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விடைப்புத்தகங்கள் அச்சிடுதல் UJ/F/08/4 என்று குறிப்பிட்டிருத்தல் வேண்டும்.

கேள்விப்பத்திரங்கள் அன்றைய தினம் காலை 10.30 மணிக்குத் திறக்கப்படும் கேள்விப் பத்திரதாரர் அல்லது அவரது பிரதிநிதி சமுகமளிக்கலாம்.

**தலைவர்,**
கேள்விப் பத்திரச் சபை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

(சி-10265)

# பாகிஸ்தானில் பள்ளிவாசல் மீது மீண்டும் தற்கொலைத் தாக்குதல்

### இரு பெண்கள் உட்பட ஏழுபேர் பலி–13 பேர் காயம்

(இஸ்லாமபாத்)

**பாகிஸ்தானின் தலைநகர் கராச்சியிலுள்ள சியா முஸ்லிம்களின் பள்ளிவாசல் மீது தற்கொலைக் குண்டுதாரியால் நேற்று முன்தினம் நடத்தப்பட்ட தற்கொலைத் தாக்குதலினால் 7 பேர் பலியானதுடன் 13 பேர் காயமடைந்தனர்.**

இச்சம்பவம் பற்றி மேலும் தெரியவருகையில்; பள்ளிவாசலினுள் புகுந்த மர்ம நபர் ஒருவரினை, அங்கிருந்த காவலாளிகள் தடுத்து நிறுத்தினர். இதனால் ஆத்திரமடைந்த அந்த நபர் திடீரெனத் துப்பாக்கிச் சூடு நடத்தியதுடன் தனது உடையில் கட்டியிருந்த குண்டினையும் வெடிக்கச் செய்தார்.

பாகிஸ்தானில், தற்கொலைப் படையினரின் வெடிகுண்டுத் தாக்குதல் ஒரு தொடர் கதையாகி விட்டது. பாகிஸ்தானில் சியா முஸ்லிம்களுக்கும், சன்னி பிரிவு முஸ்லிம்களுக்கும் இடையே இனக்கலவரம் நடைபெற்று வருகிறது. இந்த மோதலில் நூற்றுக் கணக்கானவர்கள் பலியாகி விட்டனர். கடந்த மூன்றாம் திகதி சியால் கோட் நகரில் சியா முஸ்லிம் மசூதியில் தற்கொலைப் படையினர் தாக்குதல் நடத்தியதில் 41 பேர் பலியானார்கள்.

இதையடுத்துக் கடந்த சில நாட்களுக்குமுன் முல்தான் நகரில் மத ஊர்வலத்தின் முடிவில் நடந்த தற்கொலைப்படைத் தாக்குதலில் 40 பேர் பலியாகினார்கள்.

இந்த நிலையில் கராச்சியில் சியா முஸ்லிம் மசூதியில் நேற்று முன்தினம் வெடிகுண்டுத் தாக்குதல் நடைபெற்றது. இதில் இரண்டு காவலாளிகள், மசூதியில் தொழுகை நடத்தியவர்களில் இரண்டு பெண்கள் உட்பட 7பேர் பலியானார்கள். தற்கொலைப் படைத்தீவிரவாதியும் உடல்சிதறிப் பலியானார். கடந்த 10 நாட்களில் மட்டும் எண்பது பேர் வெடிகுண்டுத் தாக்குதலில் பலியாகியுள்ளனர். 20 இற்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்தனர். இந்தக் குண்டுவெடிப்புச் சம்பவத்தைத தொடர்ந்து கராச்சி முழுவதும் பதட்டநிலை உருவாகியுள்ளது.



பாக்தாத்தின் மையப் பகுதியில் கார்க்குண்டுத் தாக்குதலில் அமெரிக்கப்படையினர் ஒருவர் உட்பட 11 பேர் கொல்லப்பட்டனர். இத்தாக்குதலில் எரிந்து கொண்டிருக்கும் காரினைக் காணலாம்.

# நேபாளத்தில் நிலச்சரிவு பேருந்தில் பயணம் செய்த 12பேர் பலி

நேபாளத்தில் நிலச்சரிவில் பேருந்து சிக்கியதில் 12பேர் உயிரிழந்துள்ளனர். மேலும் 10 பேர் பேருந்தில் சிக்கியுள்ளனர். மேற்கு நேபாளத்தில் குல்மி மாவட்டத்திலிருந்து தலைநகர் காத்மண்டுக்குச் சென்று கொண்டிருந்த பேருந்து புதவா பால்பா நெடுஞ்சாலையில் நேபாள கிராமத்தின் அருகே சனிக்கிழமை ஏற்பட்ட நிலச்சரிவில் சிக்கியது. பேருந்து சாரதி உட்பட 5பேரின் உடல்கள் சனிக்கிழமை எடுக்கப்பட்டன. ஞாயிற்றுக்கிழமை மேலும் 7பேரின் சடலங்கள் மீட்கப்பட்டன. இதுவரை 2பேர் காயத்துடன் மீட்கப்பட்டனர். மேலும் 10பேர் அப்பேருந்தில் சிக்கியுள்ளதாகவும் அவர்களை மீட்கும் பணி நடைபெற்று வருவதாகவும் பொலிசார் தெரிவித்தனர்.

# சியா முஸ்லிம்கள் ஆயுதங்கள் ஒப்படைப்பு

ஈராக் தலைநகர் பாக்தாத்தில் சியா முஸ்லிம்கள் ஆயுதங்களை ஒப்படைக்க ஆரம்பித்துள்ளனர். இடைக்கால நிர்வாக அரசு வழங்கியுள்ள பொது மன்னிப்பை ஏற்றுக் கொண்டு அவர்கள் ஆயுதங்களை ஒப்படைக்கத் தொடங்கியுள்ளனர். அல்-சதார் தலைமையிலான சியா முஸ்லிம் தலைவர்களுக்கும், அரசிற்கும் இடையில் இடம்பெற்ற பேச்சு வார்த்தையையடுத்தே ஆயுதங்களை ஒப்படைப்பதற்கு ஐந்து நாட்கள் பொது மன்னிப்புக் காலம் அறிவிக்கப்பட்டுள்ளது.



ஈராக்கில் நிலை கொண்டுள்ள தென்கொரியப் படையினருடன் இரவு விருந்தொன்றில் கலந்துகொண்ட அமெரிக்கப் பாதுகாப்பு அமைச்சின் உயர் அதிகாரி ஒருவர் படையினரை வாழ்த்துகின்றார்.

# படையினர் முற்றுகையை நீக்காவிடின் சீனப்பொறியியலாளரைக் கொல்வோம்

### பாக். அரசிற்கு தீவிரவாதிகள் எச்சரிக்கை

(இஸ்லாமபாத்)

முற்றுகையை நீக்காவிடின் இரு பொறியியலாளரையும் கொலை செய்து விடுவோம் என தீவிரவாதிகள் எச்சரித்துள்ளனர். தீவிரவாதிகள் பொறியியலாளர்களைத் தடுத்து வைத்துள்ள இடத்தைக் கூட்டுப்படைகள் முற்றுகையிட்டுள்ளனர். இதனையடுத்தே தீவிரவாதிகள் இந்த எச்சரிக்கையினை விடுத்துள்ளனர்.

பாகிஸ்தானில் ஆப்கான் எல்லையோரம் உள்ள மலைப் பகுதியில் கட்டப்பட்டு வரும் நீர்மின் நிலையத்தில் பணிபுரிந்து வந்த இரண்டு சீனப் பொறியியலாளரைத் தீவிரவாதிகள் கடத்திச் சென்றனர். சிறையில் அடைக்கப்பட்டிருக்கும் அல்-ஹைதா இயக்கத்தினரை விடுதலை செய்ய வேண்டும். அப்போது தான் சீனப் பொறியியலாளரை விடுதலை செய்வோம் என்று முன்னர் தீவிரவாதிகள் கூறி இருந்தனர். அல்-ஹைதா இயக்கத்தினரை விடுதலை செய்யாவிட்டால் சீனப்பொறியியலாளரைக் கொன்று விடுவோம் என்று தீவிரவாதிகள் மிரட்டியிருந்த நிலையிலேயே இந்த முற்றுகை இடம் பெற்றுள்ளது. "கைது செய்யப்பட்ட அனைத்து வெளிநாட்டுத் தீவிரவாதிகளையும் விடுதலை செய்ய வேண்டும் என்று அவர்கள் கோரியிருக்கின்றார்கள். இந்தக் கோரிக்கையை நிறைவேற்ற ஒரு நாள் அவகாசம் கொடுத்திருக்கிறார்கள்" என்று பாகிஸ்தான் அதிகாரி ஒருவர் கூறினார்.



இந்தியாவின் அசாம் மாநிலத்தில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கினால் துவிச்சக்கரவண்டியைத் தள்ளிச்செல்லும் இந்தியர் ஒருவரைக் காணலாம்.

# அவுஸ்திரேலியாவில் 4ஆவது முறையாக பிரதமராகிறார் ஜான் ஹோவர்டு

அவுஸ்திரேலியாவில் நடந்து முடிந்த பாராளுமன்றத் தேர்தலில் "பிரதிநிதிகள் சபை என் அழைக்கப்படும் மக்கள் அவை "செனட்" என அழைக்கப்படும் மேலவை ஆகிய இரண்டிலும் பிரதமர் ஜான் ஹோவர்டு தலைமையிலான ஆளும் கட்சிக் கூட்டணி பெரும்பான்மை பெற்றுள்ளது. 1981 இற்குப் பின் இரு அவைகளிலும் ஒரு கூட்டணிக்குப் பெரும்பான்மை கிடைத்திருப்பது இப்போது தான் என்பது குறிப்பிடத்தக்கது.

எனவே அரசு கொண்டு வரும் எந்தச் சட்டமும் இடையூறு இல்லாமல் நிறைவேறிவிடும். ஆளும் லிபரல் -தேசிய கூட்டணி இத் தேர்தலில் வெற்றி பெற்றதன் மூலம் ஜான் ஹோவர்டு (வயது65) நான்காவது முறையாகப் பிரதமராகிறார். 150 இடங்கள் கொண்ட பிரதிநிதிகள் சபையில் அவரது கூட்டணிக்கு இதுவரை 83 தொகுதிகள் கிடைத்துள்ளன.

மேலும் இரண்டை அவரது கூட்டணி கைப்பற்றும் என எதிர்பார்க்கப்படுகின்றது. ஏற்கனவே இக்கூட்டணிக்கு 82 உறுப்பினர்கள் இருந்தனர். மார்க்லேதம் தலைமையிலான தொழிற்கட்சிக்கு கடந்த பாராளுமன்றத்தில் 64 இடங்கள் இருந்தன. அது இப்போதைய தேர்தலில் 60 ஆகக் குறைந்து விட்டது. 76 உறுப்பினர்கள் கொண்ட செனத் சபையில் பிரதமர் ஹோவர்ட்டின் கூட்டணிக்கு 38 இடங்கள் கிடைத்துள்ளன. இன்னொரு தொகுதியில் அவரது கூட்டணி முன்னிலையில் உள்ளது என்று அவுஸ்திரேலிய வானொலி தெரிவித்துள்ளது.

பிரதமர் ஜான் ஹோவர்டு அமெரிக்க ஆதரவாளர் எனவே ஈராக்கிற்கு அவுஸ்திரேலிய இராணுவ வீரர்களை அனுப்பியுள்ளது. அதற்கு எதிர்ப்புத் தெரிவித்தார் எதிர்க்கட்சித் தலைவர் மார்க் லேதம். ஆனால் அவரது கட்சி தோற்றுவிட்டது. எனவே ஈராக்கில் இருந்து அவுஸ்திரேலியப் படைகள் திரும்பப்பெறப்பட மாட்டாது என்று அரசியல் நிபுணர்கள் கூறுகின்றனர்.

# உள்ளூர்விவகாரங்களில் சட்டங்களைஇயற்ற ஸ்கொட்லாந்துக்குக் கூடுதல் அதிகாரம்

இங்கிலாந்து ஆட்சிக்கு உட்பட்ட ஸ்கொட்லாந்துக்கு பிரதமர் ரொனி பிளேயர் கூடுதல் அதிகாரம் வழங்கி இருக்கிறார்.உள்ளூர் விவகாரங்களுக்கான சட்டங்களை நிறைவேற்றிக் கொள்வதற்காக பாராளுமன்றத்தை அமைத்துக் கொள்ளவும் அனுமதி வழங்கப்பட்டது இதற்காக 3 ஆயிரத்து 10 கோடி ரூபாய் செலவில் பாராளுமன்றக் கட்டடம் கட்டப்பட்டு உள்ளது.இதைக்கட்டி முடிக்க 3 ஆண்டுகள் ஆயின. அதை இங்கிலாந்து ராணி எலிசபெத் திறந்து வைத்தார்.இதற்காக அவர் உலங்கு வானூர்தியில் எடின்பர்க் சென்றார். உலங்கு வானூர்தித் தளத்தில் இருந்து அவர் இசை வாத்தியங்கள் முழங்க ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டார்.

# ஆப்கானில் மீண்டும் தேர்தல் நடத்த வேண்டும் எதிர்கட்சியினரின் கோரிக்கை நிராகரிப்பு

(காபூல்)

ஆப்கானிஸ்தானில் நடத்தப்பட்ட பொதுத்தேர்தல் முடிவை இரத்துச்செய்ய வேண்டும் என்ற எதிர்க்கட்சியினரின் கோரிக்கையை அந்நாட்டுத் தேர்தல் அதிகாரிகள் நிராகரித்துள்ளனர்.

ஆப்கானிஸ்தானில் கடந்த சனிக்கிழமை அதிபரைத் தேர்ந்தெடுப்பதற்காக முதன்முறையாகத் தேர்தல் நடத்தப்பட்டது.

இத்தேர்தலில் பெருமளவு முறைகேடுகள் நடந்துள்ளதால் தேர்தலைப் புறக்கணிப்பதாகவும் மீண்டும் மறு தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்று அதிபர் ஹர்ஷாயை எதிர்த்துப் போட்டியிட்ட 15 வேட்பாளர்கள் கோரிக்கை விடுத்தனர். ஆனால் இந்தத் தேர்தல் புறக்கணிப்பு துரதிர்ஷ்ட வசமானதென்று ஹர்ஷாய் தெரிவித்துள்ளார்.

மறு தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்ற எதிர்க்கட்சி வேட்பாளர்களின் கோரிக்கையை ஏற்க ஆப்கானிஸ்தான் தேர்தல் அதிகாரிகள் மறுத்து விட்டனர்.

இதனிடையே எதிர்க்கட்சியினரின் தேர்தலில் முறைகேடுகள் தொடர்பான புகார்குறித்து விசாரிக்கப்போவதாக விசாரணை அமைப்பொன்று அறிவித்துள்ளது.

# முல்லை நகரில் பொதுச் சந்தை வசதிகள் சீரான முறையில் அமைக்கப்படுவது அவசியம்!

## - நெருக்கடிகளை விரைந்து தீர்க்க வேண்டுகை

(முல்லை)

**முல்லைத்தீவு நகரப்பகுதியில் சீரான முறையில் பொதுச் சந்தையொன்று இன்மையால் மக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்கொண்டு வருகின்றனர். இது குறித்து உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும் எனவும் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.**

முல்லைத்தீவு நகரப்பகுதியில் தற்போது இயங்கிவரும் சந்தை பல இடநெருக்கடிகளுக்கு மத்தியில்இயங்குகின்றது. மீன்,இறைச்சி வகை,பழங்கள்,மரக்கறிகள், பலசரக்குப் பொருட்கள் அனைத்தும குறுகிய இடங்களில் வைத்து விற்பனை செய்வதால் சுகாதார சீர்கேடாக காணப்படுவதுடன் கழிவகற்றுவதற்கான பெரிய இட வசதிகளும் இல்லை.

மீன்சந்தையை கடற்கரையில் அமைப்பதற்கான முயற்சி 2003ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்டபோதும் அதற்கான நிதி உதவிகளை அரசு இதுவரை வழங்கவில்லை. ஏனைய நகரப்பகுதிகளில் இருப்பது போன்ற அடிப்படை வசதிகளுடன் கூடிய சந்தை அமைக்கப்படுமா என இப்பகுதி மக்கள் அங்கலாய்க்கின்றனர். 1990ஆம் ஆண்டு இடம் பெயர்ந்து பல நெருக்கடிகளைச் சந்தித்து மீளவும் முல்லைநகரப் பகுதியில் 80 வீதமானமக்கள் குடியேறியுள்ள போதிலும் இப்பொதுச் சந்தை பழைய இடிந்த கட்டடத்திலேயே கூரைவேலை மட்டுமே புனரமைக்கப்பட்டு வியாபாரம் நடைபெற்று வருகின்றது.

முல்லை நகரப்பகுதியிலிருந்து நாயாறு வரையான மக்களுக்கு இதுவே பொதுச் சந்தையாக இருக்கின்றபோதும் இதற்கான ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதாகத் தெரியவரவில்லை.

அத்துடன் இறைச்சிவகை விற்பனை செய்யுமிடம் குறுகிய இடமாகவும்; மலசல கூடத்திற்கு அருகாமையிலும் அமைக்கப்பட்டுள்ளதால் நோய்கள் ஏற்படுவதற்கான சூழ்நிலை உருவாகி வருகின்றது. கரைதுறைப்பற்று பிரதேச சபை நாளாந்தக் கழிவுகளை அகற்றிவருகின்றபோதும் அப்பகுதியில் துர்நாற்றம் வீசுவதையும் நேரடியாக அவதானிக்க முடிந்தது. கிணறும் சுகாதாரமுறையைப் பேணாததினால் காகங்கள் கழிவுப் பொருட்களை கிணத்தில் போடுவதால் மக்கள் வேறிடங்களில் குடிநீர் அள்ளிப்பாவிப்பதையும் அவதானிக்க முடிந்தது.

சகலவசதிகளுடன்கூடிய பொதுச் சந்தை முல்லைத்தீவில் அமைக்கப் படவேண்டும் என்பதே மக்களின் தற் போதைய அவாவாகும் (20)



கிராமிய பொருளாதார கல்வி ஆய்வு அபிவிருத்தி நிறுவனத்தினரால் கிளிநொச்சியில் நடாத்தப்பெற்றுவரும் தொழில்சார் பயிற்சிகளில் மரவேலைப் பயிற்சியில் ஈடுபட்டுள்ள யுவதிகளைப் படத்தில் காணலாம். (படம்-சோதி)

## புதிய நடைமுறை

தேசிய அடையாளஅட்டையில் இடம்பெறும் மோசடிகளைத் தவிர்ப்பதற்காக மன்னார் மாவட்டத்தில் இனிமேல் தேசிய அடையாள அட்டைக்கு விண்ணப்பம் செய்வோா தமது ஊரிலுள்ள கிராமஅலுவலரிடமிருந்து பெற்ற வதிவிடசான்றிதழைக்கட்டாயமாக இணைத்து அனுப்ப வேண்டுமென மனனார் மாவட்ட அரசஅதிபர் சகல பிரதேச செயலாளர் களுக்கும் சுற்று நிருபத்தை அனுப்பியுள்ளார்.(மி)

## வீதி ஒழுங்கு நடவடிக்கை தொடர்பாக அளம்பில் பிரதேசத்தில் கருத்தூட்டல்

(முல்லை)

முல்லைத்தீவு அளம்பில் பிரதேசத்தில் வீதி ஒழுங்கு நடவடிக்கை தொடர்பாகவும் மற்றும் சமகால கருத்துரைகள் தொடர்பாகவும் முல்லைத்தீவு காவல்பணிமனையினர் மேற்கொண்ட கருத்தூட்டல் அளம்பில் பிரதேசத்தில் நடைபெற்றது. உப்புமாவெளி கிராம அலுவலர் பரஞ்சோதி தலைமையில் இது ஆரம்பமானது. அளம்பில் பிரதேச கடற்புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் யாழ்,மன்னன் முல்லைக்காவல் பணிமனைப் பொறுப்பாளர் குணேஸ்வரன், தலைமைக்காவலர் பாஸ்கரன் ஆகியோர் கருத்துக்களை வழங்கினார்கள்.இதில் பெருமளவான வாகன ஓட்டுனர்கள, மக்கள் எனப் பலர் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது. (20)


## பரமேஸ்வரா வித்தியாலய பரிசளிப்பு விழா நிகழ்வுகள்

(வவுனியா செய்தியாளர்)

அண்ணாநகர் பரமேஸ்வரா வித்தியாலய வருடாந்த பரிசளிப்பு விழாவும் "மான்மியம்"இதழ் வெளியீடும் பாடசாலை திறந்த வெளி அரங்கில் நடைபெற்றன.

அதிபர் திருமதி எல்.எப்.நடேசமூர்த்தி தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் பிரதமவிருந்தினர்களாக வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான சிவநாதன் கிஷோர், சிவசக்தி ஆனந்தன், விநோகராதலிங்கம் ஆகியோரும், சிறப்பு விருந்தினராக, வவுனியா தேசியற் கல்வியற் கல்லூரிப் பீடாதிபதி க. பேர்னாட் அவர்களும், கௌரவ விருந்தினர்களாக பாடசாலையின் முதல் அதிபர் ர.செல்வகுமாரன், வர்த்தக வங்கி முகாமையாளர் ஆ. சிவஞானம் ஆகியோரும் கலந்து கொண்டு மாணவர்களுக்குப் பரிசில்களை வழங்கிக் கௌரவித்தனர்.

"மான்மியம்" இதழினை அதிபர் திருமதி எல்.எப்.நடேசமூர்த்தி வெளியிட்டு வைக்க முதற்பிரதியை பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் பெற்றுக்கொண்டார். (10)



முல்லை மாவட்டத்திற்கு இலங்கை நிர்வாகசேவையிலிருந்து 6 பேர் நியமிக்கப்பட்டுள்ளமை தெரிந்ததே.இடமிருந்து வலமாக உதவி அரச அதிபர் தலைமைப்பீட அதிகாரி செல்வி ப. ஆரணி,ஓட்டுசுட்டான் பிரதேச உதவி அரச அதிபர் செல்வி க.சுபாசினி,துணுக்காய்ப் பிரதேச உதவி அரச அதிபர் நா. நந்தகுமார், மாந்தை கிழக்கு உதவி அரச அதிபர் ம.ஜெகூ,கரைதுறைப்பற்று பிரதேச உதவி அரச அதிபர் அ.சோதிநாதன்,கச்சேரி புனர்வாழ்வுக் கிளைத் திட்டப் பணிப்பாளர்,செ.பிரணவநாதன் ஆகியோரைப் படத்தில் காணலாம் (படம் சகீலா)

## ஆசிரியர் தினத்தையொட்டி நடந்த போட்டிகளில் வெற்றியீட்டிய ஆசிரியர்கள் கௌரவிப்பு

(முல்லை)

முல்லைக்கல்வி வலய ஆசிரியர்களுக்கிடையே ஆசிரியர் தினத்தை முன்னிட்டு நடைபெற்ற பல்வேறுபட்ட போட்டிகளில் வெற்றி பெற்றோருக்கு பெறுமதிமிக்க பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

ஆரம்பக்கல்வி ஆசிரியர்களுக்கான வாண்மை விருத்திப் போட்டியில் முதலாம் இடத்தை சிலாவத்தை தமிழ் வித்தியாலயத்தைச் சேர்ந்த திருமதி பி.இந்திரதேவன், 2ஆம் இடத்தை சிலாவத்தை தமிழ் வித்தியாலய ஆசிரியர் செல்வி த.ராஜ்வதனி,மூன்றாம் இடத்தை, முள்ளியவளை தமிழ் வித்தியாலய ஆசிரியர் திருமதி வ.குகேந்திரன் ஆகியோர் பெற்றனர்.

**கட்டுரைப்போட்டியில** 1ஆம் இடம் சி.சுதந்திரன் முல்லைத் தீவு றோ.க வித்தியாலயம், 2ஆம் இடம் செல்வி த.மேரிசுசி முல்லைத்தீவு மகாவித்தியாலயம் 3ஆம் இடம் இ.சிவராசா உடையார்கட்டு மகாவித்தியாலயம்,

**கவிதைப்போட்டியில்**

1ஆம் இடம் திருமதி சூ.ஜெயராசா செம்மலை ம.வி., 2ஆம் இடம் திருமதி றஜனி சத்தியன் வள்ளிபுனம் க.உ.வித்தியாலயம், 3ஆம் இடம் திருமதி சியாமனி கென்றிலிஸ்மன் உடையார்கட்டு ம.வி.

**சிறுகதைப்போட்டியில்**

1ஆம் இடம் ந.கோணேஸ்வரன் வள்ளிபுனம் க.உ.வித்தியாலயம் 2ஆம் இடம் செல்வி கெ.கெங்கநாயகி சிலாவத்தை தமிழ்வித்தியாலயம், 3ஆம் இடம் செல்வி சி.கிரிசாந்தி மன்னாகண்டல் அ.த.க.பாடசாலை.

**சித்திரப்போட்டியில்**

1ஆம்இடம் ந.கோணேஸ்வரன் வள்ளிபுனம் க.உ.வித்தியாலயம், 2ஆம் இடம் ஞானசம்பந்தன் முல்லைத்தீவு றோ.க.வித்தியாலயம், 3ஆம் இடம் சூ.அன்ரன் முல்லைத்தீவு மகாவித்தியாலயம் ஆகியோர் வெற்றிபெற்றனர்.

அத்துடன் 06.10.2003 தொடக்கம் 06.10.2004 காலப்பகுதியில் குறைந்த விடுகை பெற்றமைக்காக பாராட்டும் பரிசும் பெற்றோர்.

ஈட்பணியாளர் றொபின்சன் ஜோசப முல்லை .ம.வி, செல்வி செ.யோகராணி முல்லை.ம.வி, திருமதி ம.கண்ணதாசன் புதுக்குடியிருப்பு ம.வி, தே.பிரபாகரன் முல்லை ம.வி, செல்வி த.மேரிசுசி முல்லை ம.வி, திருமதி பாரதி பரமேஸ்வரன் விசுவமடு ம.வி.ஆகியோர் பெற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது. (20)

## விவசாய உள்ளீடு வழங்கல்

(முல்லை)

அண்மையில் முல்லை பொருளாதார அபிவிருத்தி நிறுவனம் முறிப்பு, பூதன்வயல் கிராம விவசாயிகளின் நன்மை கருதி விவசாய உள்ளீடுகளை வழங்கியது. பூதன் வயல்கிராமத்தில் 20 நெற் செய்கையாளர்களுக்கும், முறிப்புக் கிராமத்தில் 40 விவசாயிகளுக்கும் விவசாய உள்ளீடுகள் வழங்கப்பட்டன. இதற்கான நிதி உதவியினை கெயர்,எக்கோ நிறுவனங்கள் வழங்கியமை குறிப்பிடத்தக்கது.




(படம் - சகீலா)

## கட்டாக்காலி கால்நடைகளை கட்டுப்படுத்தக் கோரிக்கை

பூநகரிப் பிரதேசத்தில் விதைப்பு ஆரம்பித்து பயிர்கள் முளைத்து உள்ளதால் சகல கால்நடைகளும் உடனடியாகக் கட்டப்படல் வேண்டும்; அத்துடன் எந்த வொரு பிரதேசத்தில் இருந்தும் கால் நடைகளைப் பூநகரிக்குக் கொண்டு வருவதாயின் பொருண்மிய மாவட்ட இணைப்பாளரின் அனுமதிக் கடிதம் பெறல் வேண்டுமென பூநகரி பொருண்மியப் பொறுப்பாளரும், பெரும்பாக உத்தியோகத்தரும் அறிவித்துள்ளனர். 10.10.2004 இற்குப் பின்னர் கட்டாக்காலி மாடுகள் உலாவித்திரிந்தால் பொருண்மிய சட்ட விதிகளுக்கமைய நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (34)

## வேகமாக வாகனம் செலுத்தியோருக்கு காவல்துறையினர் தண்டம் விதிப்பு

(கண்டாவளை)

பரந்தன் பகுதியில் கடந்த செவ்வாய்கிழமை தமிழீழ காவல்துறையின் வீதிப் போக்குவரத்து கண்காணிப்புப் பிரிவினர் ஏ.9 வீதியில் வேகக்கட்டுப்பாட்டை உதாசீனம் செய்து வேகமாகச் செலுத்தி வந்த இருபத்தைந்துக்கு மேற்பட்ட உந்துருளிகளைத் தடுத்து நிறுத்தி தண்டப்பணம் அறவிட்டனர். இதன் போது ஒவ்வொருவருக்கும் இருநூற்று ஐம்பது ரூபா தண்டம் அறிவிடப்பட்டு, போதியஅறிவுரைகள் வழங்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட்டனர். இதேவேளை ஒரு உந்துருளியில் 3பேராகப் பயணித்தவர்களையும், துவிச்சக்கர வண்டிகளில் பக்கம் பக்கமாக வீதியில் சென்றவர்களையும் இடைமறித்து வீதிபோக்குவரத்து நடைமுறைகள் பற்றிப் போதிய அறிவுரைகள் வழங்கப்பட்டதுடன் தொடர்ந்தும் தவறுகள் விடும்பட்சத்தில் தண்டப் பணம் அறவிடப்படுவதுடன், நீதிமன்ற நடவடிக்கைக்கு உட்பட நேரிடலாம் எனவும் எச்சரிக்கப்பட்டு அனுப்பப்பட்டனர். (14)

# தென்மராட்சிப் பிரதேச சமுர்த்தி மகாசங்க நிறைவேற்றுக்குழு செயலர் மாற்றம்

### அரசாங்க அதிபர் தலைமையில் நடந்தது

தென்மராட்சிப்பிரதேசத்தில் கடந்த இரண்டு மாதங்களாக இடைநிறுத்தப்பட்டிருந்த சமுர்த்தி மகாசங்கக் கூட்டம், நேற்று முன் தினம் காலை பத்து மணியளவில் யாழ். அரசாங்க அதிபர் தலைமையில் சமுர்த்தி மகா சங்க அலுவலகத்தில் இடம்பெற்றது.

காரசார விவாதங்களுடன் ஆரம்பமான இக்கூட்டத்தில் சமுர்த்தி உத்தியோகத்தர்களின் அசமந்தப் போக்கு மற்றும் கடமை தவறிச் செயற்படும் சமுர்த்தி முகாமைத்துவப் பணிப்பாளர் குறித்து பல முறைப்பாடுகளை ஆதாரங்களுடன் சமுர்த்தி மகா சங்க உறுப்பினர்களால் நேரடியாக அரசாங்க அதிபரிடம் சுட்டிக் காட்டப்பட்டது. இதைத் தொடர்ந்து நிறைவேற்றுக்குழு செயலாளர் பதவி வகித்து வந்த சமுர்த்தி முகாமைத்துவப் பணிப்பாளர் ரகுநாதன் என்பவரிடம் இருந்து இப்பதவி திரும்பப் பெறப்பட்டு, இருபத்தியொரு மகாசங்க உறுப்பினர்களின் ஆதரவுடன், அரசாங்க அதிபர் முன்னிலையில் மகாசங்க உறுப்பினர் திருமதி சு. பிரபாலினி அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. இதன் மூலம் தென்மராட்சிப் பிரதேசத்தில் நீண்ட பல மாதங்களாக நீடித்துவந்த பதவி அதிகாரப் போட்டி முடிவுக்குக் கொண்டு வரப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இரண்டு மணித்தியாலங்கள் நீடித்த இக்கூட்டம் இனிஅடுத்த மாதம் ஒன்பதாம் திகதி நடைபெறும் என அரசாங்க அதிபர் தெரிவிக்கின்றார். தென்மராட்சிப் பிரதேசத்தில் உள்ள நான்கு வங்கிகளில் இப்பிரதேச மக்களின் பணம் இரண்டு கோடிவரை இருப்பதாகத்தெரியவருகிறது.(28)

# மாவீரரின் தியாகத்தால் உருவான சமாதானப் பேச்சு தமிழருக்கு நல்ல தீர்வைத் தர வேண்டும்

### யாழ்.மாவட்ட துணை அரசியல்துறைப்பொறுப்பாளர்

(தீவகம்)

**மாவீரரின் தியாகத்தால் உருவான சமாதானப் பேச்சுவார்த்தை தமிழர் தரப்பிற்கு நிச்சயம் ஒரு நல்ல தீர்வைப் பெற்றுத்தரவேண்டுமென யாழ்.மாவட்ட துணை அரசியல் துறைப் பொறுப்பாளர் செம்மணன் தெரிவித்துள்ளார்.**

யாழ்.தீவகத்தில் உள்ள வேலணைப் பிரதேச தேசிய எழுச்சிப் பேரவை உறுப்பினர்களுக்கான ஒன்று கூடல் நிகழ்வு ஒன்று நேற்று முன்தினம் பிற்பகல் வேலணை கந்தசுவாமி ஆலயமுன்றலில் இடம் பெற்றுள்ளது.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு சிறப்புரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

உலக அரங்கிலேயே தமிழ் மக்கள் தமது இருப்பினை உறுதிப் படுத்தி இருப்பதற்கும், தமிழர்களது அபிலாசைகளுக்கு உலகம் செவி சாய்ந்திருப்பதற்கும் காரணமானவர்கள் எம் மாவீரர்களே.

அவர்களது தியாகங்களால் உருவான சமாதானப் பேச்சுவார்த்தை தமிழர் தரப்பிற்கு நிச்சயம் ஒரு நல்லதீர்வினைப் பெற்றுத் தரவேண்டும். அந்த அடிப்படையில் தமிழ் மக்கள் தமது அபிலாசைகளை உள்ளடக்கி சமர்ப்பித்துள்ள இடைக்கால நிர்வாக சபை யோசனையை அரசு ஏற்காது விட்டால் அதன் விளைவு பாரதூரமாக அமைந்து விடும் என்றார்.

வேலணை கிழக்கு தேசிய எழுச்சிப் பேரவை செயலாளர் க.சுரேந்திரன் தலைமையில் இடம் பெற்ற இந் நிகழ்வை யாழ். மாவட்ட அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் செம்மணன் பொதுச் சுடர் ஏற்றி ஆரம்பித்துவைத்தார்.

தொடர்ந்து ஈகச்சுடரினை 2ஆம் லெப்டினன்ட் தமிழரசியின் தாயாரும், 2 ஆம் லெப்டினன்ட் பொற்செல்வியின் தந்தையாரும் ஏற்றி வைத்தனர்.

இதனைத் தொடர்ந்து இடம் பெற்ற நிகழ்வுகளில் யாழ்.அரசியல் துறை துணைப் பொறுப்பாளர் செம்மணன்,தீவகக் கோட்ட அரசியல் துறை சிறப்பு பொறுப்பாளர் கண்ணன், வேலணைப்பிரதேசஅரசியல் துறைப்பொறுப்பாளர் யாழ்நம்பி ஆகியோர் சிறப்புரைகளை வழங்கினர்.

# மணற்காட்டில் சட்டவிரோதமாக சவுக்கு வெட்டப்படுகிறது

### மக்கள் முறைப்பாடு

யாழ். வடமராட்சியில் உள்ள மணற்காட்டுப்பகுதிகளில் சட்டவிரோதமாக சவுக்குமரங்கள் தறிக்கப்பட்டுவருவதாக வடமராட்சி கிழக்கு மக்கள் முறையிட்டுள்ளனர்.

இச்சட்டவிரோத நடவடிக்கையால் பல்வேறு விதமான சூழல் தாக்கங்கள் குறித்த அபாயமுள்ள போதும் சிறிலங்கா பொலிஸார் கவனயீனமாக இருந்துவருதால் இந்நடவடிக்கைகள் தொடர்ந்தும் இடம் பெற்றுவருகின்றன.

இது குறித்து மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். (33)

# தீவக கிராம சேவகர்களுக்கு யு.என்.டி.பி.ஆல் பயிற்சி

யாழ்.தீவகப் பிரதேசங்களில் கடமையாற்றிவரும் கிராமசேவை உத்தியோகத்தர்களுக்கு சமூக அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பான பயிற்சிகளை வழங்கும் நடவடிக்கைகளில் ஐக்கிய நாடுகள் சபையின் (UNDP) அபிவிருத்தித்திட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அந்த அடிப்படையில் ஊர்காவற்றுறைப் பிரதேசத்தைச் சேர்ந்த கிராம சேவை உத்தியோகத்தர்களுக்கென ஐ.நா அபிவிருத்தித் திட்டத்தினால் (UNDP) நடத்தப்படும் 'சமூகஅபிவிருத்தி நடவடிக்கைகளில் கிராம சேவகர்களின் செயற்பாடு' என்ற பயிற்சிப் பட்டறை எதிர்வரும் 15 ஆம் திகதி காலை 8.30 மணிதொடக்கம் மாலை வரை ஊர்காவற்துறை பிரதேச செயலக மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

இதன் போது போரினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களை அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக தெரிவு செய்தல், தெரிவுசெய்யப்பட்ட பிரதேச அபிவிருத்திக்கான செயற்திட்டங்களை வளர்த்தல் எனப்பல் வேறுபட்ட பயிற்சிகளும் வழங்கப்படவுள்ளன. (33)

# பாராளுமன்ற சட்ட மூலத்தை மாற்றியமைத்து சந்திரிகாவை மீண்டும் சனாதிபதியாக்குவோம்

### பிரதமர் மகிந்த ராஜபக்ஷ கூறுகிறார்

(கொழும்பு)

பாராளுமன்ற சட்ட மூலத்தை மாற்றி சந்திரிகாவை மூன்றாவது தடவையும் சனாதிபதியாக்குவோம் என்று சிறிலங்கா பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.பிரதமர் மகிந்த ராஜபக்ஷவின் உத்தியோகபூர்வ காரியாலயத்தில் ஊடகவியலாளரான மொகமட் ஏ.ஆர்.கலதாரி நடாத்திய பிரத்தியேகப் பேட்டியின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அடுத்த சனாதிபதித் தேர்தலில் மகிந்த போட்டியிடுவாரா? என்று கேட்கப்பட்ட கேள்விக்கே பிரதமர் இவ்வாறு கூறினார். சிறிலங்கா அரசியலில் அதிகார ரீதியாகவும், மக்கள் செல்வாக்கு ரீதியாகவும் சனாதிபதி சந்திரிகா முதலாமிடத்தையும், தான் இரண்டாமிடத்தையும் வகிப்பதாகக் கூறிய பிரதமர், அடுத்த சனாதிபதியாகும் தகுதி தனக்கு இருப்பதைச் சுட்டிக்காட்டினார்.நோர்வே நாட்டின் அனுசரணையைக் கோரியது உட்பட சமாதானப் பேச்சுக்களை முதலில் முன்னெடுத்தது தானே என்று சனாதிபதி சொல்லிவரும் நிலையில், நோர்வே அனுசரணையாளர்களை அழைத்தது ரணில் அரசே என்று மகிந்த கூறியுள்ளார்.விடுதலைப் புலிகள் கையளித்த இடைக்கால தன்னாட்சி அதிகார அலகின் கீழ் பேச்சுவார்த்தைகளை முன்னெடுக்க அரசு தயாராக இருக்கின்ற போதும், விடுதலைப் புலிகளே பேச்சுக்களை ஆரம்பிக்க முன்வராது முட்டுக்கட்டையாக உள்ளார்கள் என்றும் மகிந்த தனது பேட்டியின் போது தெரிவித்துள்ளார்.சிறிலங்கா சனாதிபதிக்கு மிக அதிகமான அதிகாரங்கள் இருப்பதை ஒத்துக்கொண்ட பிரதமர் மகிந்த ராஜபக்ஷ பிரதமரைத் தலைமையாகக் கொண்ட சிறிலங்கா பாராளுமன்றத்திற்கும் அதிக அதிகாரங்கள் இருப்பதாகவும், நாட்டின் அரசியல் இராஜாங்க முடிவுகளை எடுக்கும் அதிகாரம் பாராளுமன்றத்திற்கும் பிரதமருக்குமே இருப்பதாகவும் கருத்து வெளியிட்டுள்ளார்.எது எப்படியிருப்பினும், பாராளுமன்றத்தின் ஆளும் கட்சி உறுப்பினர்களும் ஏனைய சில உறுப்பினர்களும் விருப்பம் தெரிவிக்குமிடத்து, பாராளுமன்ற சட்டமூலமொன்றின் மூலம் சனாதிபதித் தேர்தலுக்கு ஒருவர் இரு தடவைக்கு மேலும் வேட்பாளராகத் தோற்றலாம் என்ற ஒரு புதிய சரத்தை உள்வாங்கி சனாதிபதி சந்திரிகாவை இன்னும் 4 வருடங்களுக்கு சனாதிபதியாகத் தொடர்வதற்கு வாய்ப்பை உருவாக்க முடியும் என்றும் விளக்கினார்.

# புலிகளின் இ.த.அ.சபை யோசனையை ஒருபோதும் ஏற்கப்போவதில்லை

### மல்வத்த மகாநாயக்கர் தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டைப் பிரிவினைக்கு இட்டுச் செல்லும் தமிழீழ விடுதலைப் புலிகளின் இடைக்கால தன்னாட்சி அதிகார சபையைத் தாம் ஏற்றுக் கொள்ளப் போவதில்லை என மல்வத்த மகாநாயக்கர் திப்பட்டுவாவே சுமங்கல தெரிவித்துள்ளார். நேற்றுமுன்தினம் தம்மைச் சந்தித்த பௌத்த நடவடிக்கைக் குழுவிடம் இந்தக் கருத்தை மகாநாயக்கர் வெளியிட்டுள்ளார். தம்மைச் சந்திக்க வருவோர் எவரையும் தாம் நிராகரிக்கப் போவதில்லை எனக் குறிப்பிட்ட மகாநாயக்கர் தேசிய ஆலோசனைச் சபையை எவரும் விமர்சிக்காமல் அதனை ஏற்றுக்கொள்வதே சிறந்தது எனத் தெரிவித்துள்ளார்.(32)

# இங்கிலாந்துக்கான தூதுவர் பதவி விலகத் தீர்மானம்

(கொழும்பு)

இங்கிலாந்தில் உள்ள சிறிலங்காவுக்கான உயர் ஸ்தானிகர் பாயிஸ் முஸ்தபா இந்த வருட இறுதியுடன் பதவி விலகவுள்ளதாக அறிவித்துள்ளார்.

2002ஆம் ஆண்டு ஐக்கிய தேசிய கட்சி ஆட்சிக்காலத்தில் இவர் இங்கிலாந்திற்கான சிறிலங்காத்தூதுவராக நியமிக்கப்பட்டிருந்தார்.இவருடைய பதவிக் காலம் எதிர்வரும்2005ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் முடிவடையவுள்ளது.இருந்த போதிலும் தனது பதவிக்காலம் நிறைவடைவதற்கு முன்பாக தான் பதவி விலகவுள்ளதாக பாயிஸ்முஸ்தபா அறிவித்துளளார். தனது முடிவு குறித்து சனாதிபதிக்கும் வெளிவிவகார அமைச்சருக்கும் தான் அறிவித்துள்ளதாக அவர் கூறியுள்ளார். (32)

# கொள்ளைச் சந்தேகநபர் பொலிஸ் பிடியிலிருந்து ஓட்டம்

(கொழும்பு)

மத்துகம பொலிசாரால் கொள்ளைச்சம்பவம் ஒன்று தொடர்பில் கைது செய்யப்பட்ட ஒருவர் தப்பிச் சென்றுள்ளார். இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இடம்பெற்றுள்ளது. சுமார் 3 இலட்சம் பெறுமதியான தங்க நகைகளைக் கொள்ளையிட்டமை தொடர்பாக இவர் ஹட்டன் நகரில் கைது செய்யப்பட்டு மத்துகம பொலிசாரரினால் அன்றைய தினம் நீதவான் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டார். இதன் பின்னர் அவரை விளக்கமறியலில் வைப்பதற்காக அழைத்துச் சென்ற போது அவர் பொலிஸ் வாகனத்தில் இருந்து தப்பிச் சென்றதாக தெரிவிக்கப்பட்டுள்ளது

# அனுருத்த ரத்வத்தை மீது சொத்துக்குவிப்பு விசாரணை

(கொழும்பு)

முன்னாள் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ரத்வத்தையின் நான்கு கோடி முப்பது லட்ச ரூபாய் சொத்துக் குவிப்பு சம்பந்தமாக சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.இதற்குத் தகுந்த பதில் தரவேண்டும் என ரத்வத்தையிடம் லஞ்ச ஊழல் ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

# சுதந்திர தேர்தல் ஆணைக்குழுவை நிறுவ எதிர்க்கட்சிகள் அரசுக்கு அழுத்தம்!

(கொழும்பு)

வாக்களிப்பதற்கு கட்டாய அடையாள அட்டைச் சட்டத்தை அமுல்படுத்தக் கூடிய அக்கறையைப் போன்று சுதந்திரத் தேர்தல் ஆணைக்குழு நிறுவுவதிலும் அக்கறை காட்ட வேண்டும் என்று சனிக்கிழமை எதிர்க்கட்சிகளான ஐக்கிய தேசியக் கட்சி, தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு, சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ், ஜாதிக ஹெல உறுமயவுடன் இலங்கைத் தொழிலாளர் காங்கிரசும் அரசைக் கேட்டுள்ளன என அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இது கொள்கையளவில் இருப்பதாகவும் கட்சித் தலைவர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டால் தாமதமின்றி நிறுவப்படும் என்றும் கம்யூனிஸ்ட் கட்சிச் செயலாளரும், கட்டட நிர்மாண அலுவல்கள் அமைச்சருமான டியு.குணசேக்ர தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் நான் அமைச்சரவையில் சட்டங்களை நிறைவேற்றும் அதிகாரி மட்டுமே. அவ்வாறு ஒரு சபையை நிறுவுவதற்கான பொறுப்பை ஏற்றுக்கொள்ள முடியாது எனவும் சனாதிபதி மட்டுமே அரசியல் ஆலோசனைச்சபையைக் கவனித்துக்கொள்பவர். அவராலேயே நிறுவ முடியும்.இது விரைவாக நிறுவப்படும் என்று தான் நம்புவதாகவும் கூறினார்.

தற்போது சனாதிபதிக்குள்ள பிரச்சினை அரசியல் ஆலோசனைச் சபையை நிறுவுவதே .எனினும் அதனை அவர் நிராகரிப்பார் அல்லது ஏற்றுக்கொள்வார். முதலாவதாக ஏற்றுக்கொள்ளுமிடத்து அதற்கான அங்கத்துவர்களையும் கோரவேண்டும், அத்துடன் ஏனைய கட்சிகளுடன் இணக்கப்பாட்டுக்கு வரவேண்டும். இவை ஒன்றும் நிறைவேறாத பட்சத்தில் அவர் அரசியல் யாப்பை மாற்றுவது பற்றிச் சிந்திக்கலாம் என டியு. குணசேகர மேலும் தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சி உறுப்பினரான மகிந்த சமரசிங்க அரசியலமைப்புச் சபையை அனைத்துக் கட்சிகளும் விரைவில் உருவாக்க வேண்டுமெனக் கோருவதாகத் தெரிவித்துள்ளார்.

# பிசுபிசுத்துப் போன தேசிய நல்லிணக்க சபை

சமாதானத்திற்கும் நல்லெண்ணத்திற்குமானதேசிய ஆலோசனைச் சபை யென்ற ஒரு பொம்மையை சந்திரிகா அம்மையார் அரசியல் அரங்கிலே மேடையேற்றி விட்டுள்ளார். அப்பொம்மையைப் பார்ப்பதற்கான பார்வையாளர்களோ, ஆதரவாளர்களோ எவருமே சபைக்குள்ளே இல்லை. தனியே அது வெறும் தயாரிப்பாளர்களுடன் மௌனமாக ஆடாமல், அசையாமல் நிற்கிறது.

இலங்கையின் இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பாக ஆளும் வர்க்கத்தினால் கையாள்கை செய்து வந்த பல்வேறு பொம்மைகளில், இறுதியாக வந்த ஒரு பொம்மையே இந்த சமாதானத்திற்கும் நல்லிணக்கத்திற்குமான தேசிய ஆலோசனைச்சபையென்ற பொம்மையாகும். இது விசேடமாக சந்திரிகாவினால் கொண்டுவரப்பட்ட இரண்டு மூன்று ஏமாற்றுவித்தையுடன் கூடிய கபட நாடகங்களுள் ஒன்றாகக் கூறினாலும் தவறாகமாட்டா!

இனப்பிரச்சினையைத் தீர்த்து வைப்பதில் ஆளும் சந்திரிகா கூட்டணி திறந்த மனதுடன் செயற்பட முடியாது என்பதை நிரூபணம் செய்வதற்கு மீண்டுமொரு முறை தமிழர்களுக்கு எடுத்து விளக்கப்பட்ட ஒரு நடவடிக்கையாக இது காணப்படுகிறது. போர் ஓய்ந்து அமைதி ஏற்பட்டிருக்கும் சூழ்நிலையிலே ஆக்கபூர்வமானசெயற்பாடுகளை முன்னெடுப்பதற்கான சமாதானப் பேச்சுவார்த்தைகள் தொடங்கப்பட்டு அது நடுவிலே நின்றுபோன நிலையில், அதனைத் தொடரவிடாது குழப்பியடித்து, பாராளுமன்றைக் கலைத்து ஆட்சியைப்பிடித்த சந்திரிகா-ஜே.வி.பி கூட்டணி இதுவரையிலும் சமாதானப் பேச்சுவார்த்தைகளில் புலிகளுடன் இணையவில்லை. இணைவதற்கான ஆக்கபூர்வ செயற்பாடுகளை முன்னெடுக்கவுமில்லை நிரந்தரத் தீர்வுக்கான பேச்சுவார்த்தைகளைத் தொடங்க முன்னர் இடைக்காலதன்னாட்சிஅதிகார சபை


ரணில்

யொன்றை நிறுவுவதற்கான பேச்சுக் களைத் தொடங்கி அதன் அடிப்படையில் தொடர்ந்து பேசலாம் என தமிழீழ விடுதலைப் புலிகள் தரப்பினரால் முன்வைக்கப்பட்ட கோரிக்கையை சந்திரிகா அரசு ஏற்றுக் கொள்ளாத நிலையிலே எதுவிதமான நகர்வுகளுக்கும் ஆயத்தமாகாது பேச்சுவார்த்தைச் செயற்பாடுகள் இறுகிப் போன நிலையிலேயே காணப்படுகின்றது. இந்த இறுக்க நிலையைத் தளர்த்தி பேச்சுக்கான நடவடிக்கைகளைத் தாம் முன்னெடுப்பதான ஒரு மாயத்தோற்றத்தை உலகுக்குக் காட்டவே இந்த நல்லிணக்க சபையை உருவாக்குப் செயலில் இறங்கினார் சந்திரிகா. இது அவருக்குப் பாரிய தோல்வியையே கொடுத்திருக்கிறது. அதாவது சகல கட்சிகளையும் உள்ளடக்கி, அனைத்து சிவில் சமூகபிரதிநிதிகளையும், மதத்தலைவர்களையும், கல்விமான்களையும் உள்ளடக்கியதாக அமைக்கப்படஉள்ளதாக முன்மொழிந்த செயற்றிட்டத்தின் அங்குரார்ப்பணக் கூட்டத்தையே புறக்கணித்த எதிர்க்கட்சிகள், தமிழ்க்கட்சிகள் மற்றும் சிவில் சமூகப் பிரதிநிதிகள் அதனைமுற்றாக எதிர்த்து கூட்டத்தில் கலந்து கொள்வதையும் தவிர்த்தார்கள். இக் கூட்டம் தனியே ஆளும் கட்சியின் உறுப்பினர்களால் கூட அலசிஆராய்ந்து பார்க்கப்படாமல் பிசுபிசுத்துப்போனது.

இந்த முயற்சியின் தோல்வியிலே தான் சந்திரிகா ஒரு கருத்தை வெளிப்படுத்தினார். அது யாதெனில் "கொழும்பின் பிரதான சிங்களக் கட்சிகள் ஒன்றுசேராத வரை தீர்வு, கிடையாது"என்றுகடந்த மாவீரர்தின உரையிலே தமிழீழதேசியத்தலைவர் அவர்கள் கூறிய கூற்றாகும். இதனைச் சந்திரிகா எடுத்துக் கூறினாலும், சொல்லப்பட்ட கருத்து முற்றிலும் உண்மையானது என்பது சிங்கள மக்களும் விளங்கிக் கொண்டதொன்றாகவே இருக்கமுடியும். ஆனால் அதனைச் செயலில் காட்டவேண்டியவர்கள் யார்? இப்படியான ஒரு கருத்தை முன்வைப்பதற்குக் காரணமாய் இருப்பவர்கள் தான். இதனைப் புரிந்து கொண்டு பிரச்சினையைத் தீர்க்க முன்வரவேண்டும். அதனை விடுத்து தாங்கள் ஒரு தலைப்பட்சமாக முன்வைத்த கருத்தை ஏற்றுக் கொள்ளவில்லை யென்பதற்காக சந்தர்ப்பவாதம் கதைத்துத் தப்பிக் கொள்ள முயல்வது தான் ஏற்றுக் கொள்ளமுடியாத விடயமாகும். ஏனெனில் இடைக்கால நிர்வாக சபைத்திட்டத்தின் அடிப்படையில் பேச்சுக்களைத் தொடங்கவும் அதனை முன்கொண்டு செல்லவும் பிரதான எதிர்க்கட்சியான ஐ.தே. முன்னணி ஆதரவு தர முன்வந்த வேளையிலும் அதனைத் தட்டிக்கழித்து பேச்சுகளைத் தொடங்குவதற்கு கூட இதுவரை முன்வராத அரசு முன்வைத்த கருத்தை விடுதலைப் புலிகள் கூட முற்றாக ஏற்றுக்கொள்ள முன்வராத பொழுது பிரதான எதிர்க்கட்சிகள் எவ்வாறு ஏற்றுக் கொள்ள முடியும்? அவ்வாறு ஏற்றுக் கொண்டு விட்டாலும் என்னதான் நடக்கப் போகிறது?


சம்பந்தன்

"அரசியல் துறைப்பொறுப்பாளர் வெளிநாடுகளுக்கான பயணங்களில் இருக்கையில், தற்போது இருக்கும் சூழ்நிலை இனியெப்போதும் வரப்போவதுமில்லை. இதுவரை காலமும் எப்போதுமே வந்ததுமில்லை என்ற அவரது எதிர்க்கட்சி, ஆளும் கட்சிகளின்நிலைப்பாடு சம்பந்தமான கருத்தானது முற்றிலும் யதார்த்தமானது. இதனைச் சாதகமாகப்பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென்ற அவரது அறிவுறுத்தலும் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டியதொன்றாகவே உள்ளது. இது ஆளும் கட்சியின் காதில் எவ்வளவுதூரம் விழுந்திருக்குமோ தெரியாது.

இனப்பிரச்சினைத் தீர்வு விடயத்திலும் சரி, பேச்சுவார்த்தைகள் தொடங்கப்பட எடுக்கின்ற எல்லா முயற்சிகளும் சரி ஆளும் கூட்டணிக்குள்ளே ஒருமித்த கருத்து இருக்காததே இவை கைகூடாமைக்குப் பிரதான காரணமாகும் . இதற்குப்பிறகு அதற்கு யார் காரணம் என்று கூறித் தெரிய வேண்டியதில்லை. அண்மையில் ஐ.தே. முன்னணியின் முன்னாள் அமைச்சரும் பேச்சுவார்த்தைக் குழுவின் தலைவருமான ஜீ.எல்.பீரிஸ் கூறுகையில் அரசுக்குள்ளே தான் முரண்பாடு இருக்கிறது. அதனைத் தீர்க்கட்டும். பின்னர் ஏனையவை சரியாகி விடும் என்று கூறினார். அதாவது சந்திரிகா ஒருதரம் கூறுவதை, மறுமுறை கூறவில்லை என்பார்.அல்லது அவர் ஒன்றைக்கூற ஜே.வி.பி அதனை மறுத்து இன்னொன்றைக் கூறும். இந்த நிலை முதலில் தீர்க்கப்பட வேண்டும் என வலியுறுத்திக் கூறியிருந்தார். இது ஜீ.எல்.பீரிஸ் கூறித்தான் தெரியவேண்டுமென்பதில்லை. என்றாலும் எதிர்க்கட்சியைச் சேர்ந்த ஒருவர் கூறுமிடத்து அதனைப் பரிசீலனை செய்ய வேண்டியது ஆளும் கட்சியினரின் பொறுப்பாகும். இல்லையேல் நாய் வாலை நிமிர்த்தமுடியாத பழமொழியையும், கெடுபிடி சொற்கேளாது என்றும் நாட்டு மக்கள் கூறவேண்டியேற்படும், கூறுவதில் தவறுமில்லை.

சந்திரிகா அம்மையார் 1995 இல் கொண்டு வந்த அதிகாரப் பரவலாக்கல் திட்டமும் ஒன்றும் இல்லாத வெறும் கோதாகவே தமிழ்மக்களால் பார்க்கப் பட்டதும், நிராகரிக்கப்பட்டதும் தெரிந்த விடயமாகும். உலகத்தை பேய்க்காட்டவும் தமிழ் மக்களை ஏமாற்றவும் எடுத்த அந்த முயற்சியும் செல் லாக்காசாகிப் போன வரலாறை நாடறியும். இப்போது தேசிய நல்லிணக்க சபை யென்னும் பெயரிலே பேச்சுக்களுக்கான காலத்தை இழுத்தடிக்கவும், தமிழர் தாயகப் பகுதியிலே ஏற்படுத்தவிருந்த அபிவிருத்திப் பணிகளைப் பின் தள்ளவுமே இந்த முயற் சிகளை மேற்கொண்டுள்ளார் சந்திரிகா.

இதேவேளை மறுவளமாக விடுதலைப் புலிகள் தான் பேச்சுக்கு வருகிறார்கள் இல்லை என்ற ஒரு மாற்றுப்பிரச்சாரத்தை உலக அரங்கிலே கூறி வருகிறார். இதனை அவர் ஐக்கிய நாடுகள் கூட்டத்திலே உரையாற்றிய உரையில் இருந்து கவனிக்கக் கூடியதாகவிருந்தது.

இந்தப் பிரச்சாரத்தை முறியடிக்கவும் உலகுக்கு உண்மை நிலையைத் தெளிவுபடுத்தவுமே விடுதலைப்புலிகளின் அரசியல் குழுவினர் வெளி நாடுகளுக்கான பயணங்களை மேற்கொண்டு தமது நியாயமான கோரிக்கைகளையும் நிலைப்பாட்டையும் தெரியப்படுத்தி வருகிறார்கள்.


அதேவேளை சமாதான முன்னெடுப்புக்களில் தமது ஆர்வத்தையும், அவசியத்தையும் உணர்த்தியும் வருகின்றார்கள்.

சமாதான நடவடிக்கைகள் கைக்கு எட்டாத நிலையிலும் அதற்கான முயற்சிகளை முன்னெடுப்பது மகிழ்ச்சியைத் தருகின்றது என்று சமாதான முன்னெடுப்புக்களின் நடுநிலையாளரான விதாக் ஹெல்கேசன பாராட்டியிருப்பது இந்த உண்மைநிலையை எடுத்துவிளக்கப் போதுமானது.

ஆனால் முன்னர் விடுதலைப்புலிகளுக்கெதிரான நிலைப்பாட்டில் இருந்த நாடுகள் கூட விடுதலைப்புலிகள் பேச்சுவார்த்தை முயற்சிகளிலே தற்போது ஆர்வம் காட்டி வருகிறார்கள் என்று பாராட்டுத்தெரிவித்து இருக்கின்றன.

இது மட்டுமல்ல தற்போதைய நிலைமையைப் போன்று முன்னர் விடுதலைப்புலிகள் உத்தியோக பூர்வமாக வெளிநாடுகளுக்கான பயணங்களை மேற்கொண்டிருக்கவில்லை. இதனால் இதனைச் சாதகமாகப் பயன்படுத்தி விடுதலைப்புலிகளுக்கெதிரான பிரச்சாரத்தை சிறிலங்கா அரசு மேற்கொள்ள இலகுவாக இருந்தது. அதிலே குறிப்பாக சந்திரிகாவின் முன்னைய ஆட்சியிலே வெளிவிவகார அமைச்சராக இருந்த லக்ஷ்மன் கதிர்காமர் கணிசமான அளவு ஈடுபட்டிருந்தார். வெற்றியும் கண்டார். ஆனால் தற்போது விடுதலைப் புலிகள் சகல நாடுகளுக்கும் செல்லக்கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கும் போது விடுதலைப புலிகளுக்கெதிரான பெரும் பிரச்சாரமும் சாத்தியமாகாமல் போய்விடும். ஏனெனில் பலநாட்டு இராஜதந்திரிகளையும் புலிகள் சந்தித்து தமது நிலைப்பாட்டை தெளிவுபடுத்தி வருகிறார்கள். மறுபுறம் வன்னிப் பகுதிக்கும் பலநாட்டுத் தூதுவர்களும் வந்து சென்று கலந்துரையாடல்களை மேற்கொள்கின்றனர்.

எனவே சிறிலங்கா அரசின் இந்த முயற்சியும் வெற்றியைத் தரப்போவதில்லை. ஆகவே பேச்சு முயற்சிகள் மேற்கொள்ளப் படாமைக்கான காரணமாக எதனை அரசு


தேசிய நல்லிணக்க சபை அமர்வு

முன்வைக்கப் போகின்றது? ஏனெனில் பேச்சு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு அமைதி நடவடிக்கைகள் தொடர்ந்து சென்றால் தான் சர்வதேச உதவி வழங்கும் நாடுகள் தாம் முன்மொழிந்த நிதியினை இலங்கை அபிவிருத்திக்கென வழங்கமுடியும். இல்லையேல் நாட்டின் அபிவிருத்தி நடவடிக்கைள் மேற்கொள்ளப்படமாட்டாது. நாட்டின் மக்களின் பொருளாதார நிலைமை உயர் வடையவும் வாய்ப்பில்லை.

அதேவேளை தற்போது அதிகரித்திருக்கும் வாழ்க்கைச்செலவும், வேலை வாய்ப்பற்றிருக்கும் இளைஞர், யுவதிகளின் எண்ணிக்கையும் மக்களை விரக்தி கொள்ளவே வைக்கும். ஆகவே இன்றுள்ள முக்கியமான தேவை சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிப்பது; அதற்கான வழிமுறைகளை விரைவாக முன்னெடுப்பது ஆகும். இதற்குப் பிரதான எதிர்க்கட்சியாகிய ஐ.தே முன்னணிவழங்க முன்வரும்ஆதரவை சந்தேகக் கண்கொண்டு பார்க்காமல் முழு மனதுடன் பரிசீலித்து அரிய வாய்ப் பைப் பயன்படுத்திக் கொள்ளவேண்டும்.

அதேவேளை விடுதலைப்புலிகள் இடைக்கால நிர்வாக சபையின் அடிப்படையிலேதான் பேச்சுக்களை ஆரம்பிக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்களே தவிர இடைக்கால நிர்வாகம் தந்தால் தான் பேச்சுக்கு வருவோம் என்று கூறவில்லை. பேச்சு மேசைக்குப் போன பின்னர் இரு பகுதியினரும் பரஸ்பரம் புரிந்துணர்வுடன் நடந்துகொள்ளலாம். எனவே கட்சிக்குள்ளே கங்கணம் கட்டிக்கொண்டு நிற்பவர்களை ஒருபுறம் வைத்துவிட்டு, பேச்சுமுயற்சிகளை மேற்கொள்ளவேண்டும்.

ஒஸ்லோ பிரகடனத்தின் அடிப்படையிலே பேச்சுக்களை முன்கொண்டு செல்லலாம் என சந்திரிகா கூறியுள்ளதை பிரதான ஐக்கிய தேசியக் கட்சியும் வரவேற்றிருக்கிறது. அதற்குத் தமது பூரண ஆதரவைத் தருவதாகவும் கூறியிருக்கும் மற்றொரு சாதகமான நிலைமையினையும் அரசு இதய சுத்தியுடன் அணுகி அடுத்தகட்ட ஆக்க பூர்வமான நகர்வுகளுக்கு; சமாதானப்பேச்சுவார்த்தைக்கு இட்டுச்செல்வது அரசின் தவிர்க்க முடியாத தேவையும், கடமையுமாகும்.

-ஸ்ரீபன்-



# விளையாட்டு அரங்கு

ஜெயந்திரன்

# தனியிடம் உண்டு



கிளிநொச்சி அணி

கிளிநொச்சி மாவட்ட மகளிர் கால்பந்து அணி, மாவட்டங்களுக்கிடையில் நடைபெற்ற கால்பந்து சுற்றுப் போட்டியில் பிரமாதமான வெற்றியைப் பெற்று அசைக்க முடியாத அணி எனத் தன்னை இனம் காட்டியது.

2ஆம் லெப்ரினன்ட் மாலதி நினைவு நாளையும், தமிழீழ பெண்கள் எழுச்சி நாளையும் சிறப்பிக்கும் வகையில் வடக்கு-கிழக்கு மாவட்டத்தைச் சேர்ந்த மகளிர் கால் பந்து அணிகளை உள்ளடக்கிய சுற்றுப் போட்டி ஒன்று கிளிநொச்சி மருதநகர் உதயதாரகை மைதானத்தில் நடைபெற்றது.

கிளிநொச்சி, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம், மன்னார், திருமலை அணிகள் இச் சுற்றுப் போட்டியில் கலந்து கொண்டன.

இதில் ஆண்கள் கால்பந்துப் போட்டியில் அகில இலங்கை ரீதியிலும், வடக்கு-கிழக்கிலும் முன்னிலை வகிக்கும் திருமலை, மன்னார் மாவட்ட அணிகள் கிளி, முல்லை மாவட்ட அணிகளிடம் அவர்களது பெண்கள் அணி படுதோல்வி அடைந்தமை கிளி.முல்லை அணிகளின் திறமைக்குச் சாட்சியாக அமைந்தது.

குறுகிய காலத்தில் வளர்ச்சி அடைந்த இவ் அணிகள் தொடர் பயிற்சியின் மூலம் நினைத்ததைச் சாதிக்கலாம் என்பதற்கு எடுத்துக்காட்டாக விளங்கியது, இது பார்வையாளர்களை அதிசயிக்க வைத்தது.

இதில் கிளி.மாவட்ட அணியின் பந்துப் பரிமாற்றம், நேர்த்தியான கோல் வாயிலை நோக்கியதான உதைகள் பிரமிக்கும் வகையில் அமைந்திருந்தன. ஆண்களால் சாதிக்க முடியாததை பெண்கள் சாதித்துக் காட்டினர் என்று கூறுவதே பொருத்தமாக இருககும்.

ஏற்கனவே பதுளையில் நடைபெற்ற மாகாணங்களுக்கிடையிலான மகளிர் கால் பந்துப் போட்டியில் கிளி.மாவட்ட மகளிர் அணி மூன்றாவது இடத்தைப்பெற்று பெருமை சேர்த்ததை மறந்து விட முடியாது.

யாழ் மாவட்ட அணி, திருமலை அணிக்கு எதிராக பத்து கோல்களைப் போட்டு இறுதிப் போட்டிக்கும், முல்லை அணியைத் தோற்கடித்து கிளிநொச்சி அணி இறுதிப் போட்டிக்கும் தெரிவாகின.

இதனால் யாழ்.மாவட்ட அணியுடனான இறுதிப் போட்டி மிகவும் பலம் பொருந்தியதாகவும் பரபரப்பாகவும் அமையும் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் ஏமாற்றம். யாழ்.மாவட்ட அணிக்கு பரிதாபமான தோல்வியே மிஞ்சியது.

ஆரம்பம் முதலே அபார ஆட்டம். இரணடாவது நிமிடத்தில் முதலாவது கோலை கிளி.அணி போட... போட்டி நிறைவடையும் வரை கிளி.அணியின் ஆதிக்கமே. இதனால் இறுதிப் போட்டி உப்புச் சப்பற்ற முடிவைத் தந்ததுடன் கிளி.அணியின் பலத்தை நிரூபிக்கும் போட்டியாக மட்டுமே அமைந்திருந்தது.

அருமையான ஆட்டம். அனைவருமே தமது நிலைகளின் பணிகளை திறம்பட ஆற்ற, யாழ்.அணி திணறியது என்று தான் கூறவேண்டும். இதேவேளை இச்சுற்றுப் போட்டியில் கலந்து கொண்ட முல்லை மாவட்ட அணி, மன்னார் அணியை 9-0 என்ற கோல் எண்ணிக்கையில் தோற்கடித்து, தனது திறமையை வெளிப்படுத்தி, இறுதிப் போட்டிக்குத் தகுதி உடைய அணி என்பதை இனம் காட்டிய போதும் அரையிறுதியில் கிளி.அணியை எதிர்கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டு வெளியேறியது.

இறுதிப் போட்டியில் யாழ்.அணிக்கு எதிராக 8 கோல்களை அடித்த கிளி.அணி-யாழ்.அணியை ஆட்டம் நிறைவடையும் வரை ஒரு முறைதானும் தமது கோல் காப்பாளர் பந்து சேகரிக்கும் நிலையை ஏற்படுத்தாதது அதன் பலத்துக்கு மேலும் பலம் சேர்த்தது.

எனவே கிளிநொச்சி, முல்லை மாவட்ட மகளிர் கால்பந்து அணி ஏனைய மாவட்ட அணிகளை விட உச்சத் திறனில் உள்ளதை இச் சுற்றுப் போட்டி வெளிச்சத்துக்கு கொண்டு வந்துள்ள நிலையில் மாவட்டம் மாகாணம் என்று தாண்டி தேசிய ரீதியில் கிளிநொச்சி மாவட்டத்துக்கு மகளிர் கால்பந்தில் தனியிடம் ஒன்று கிடைப்பது தொலைவிலில்லை.




யாழ்.அணி

# முந்தப் போகிறார்கள் பெண்கள் ஆண்கள் 'வேகம்' குறையும்?

ஒலிம்பிக்கின் உச்சக்கட்டம் என்றால்... அது 100 மீற்றர் ஓட்டம் தான் இதில் ஆண்கள் பிரிவில் முதல் இடம் பிடிக்கும் வீரரை அறிய பெரும் ஆவல் காணப்படும். அந்தக் காலம் முதல் இப்போதைய எதென்ஸ் ஒலிம்பிக் வரை ஆண்களே அதிவேக வீரர்களாக உலா வந்தனர். இதற்குப் 'போட்டி' வரப்போகிறது. அது பெண்கள் பகுதியில் இருந்து என்பது அதிர்ச்சி அளிக்கும் விஷயம். ஆம் ஆண்களைக் காட்டிலும் பெண்கள் அதிவேகமாக ஓடப்போகிறார்கள் என்று ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

பிரிட்டனின் பிரபல ஒக்ஸ்போர்டு பல்கலைக்கழகம் சமீபத்தில் ஆய்வு ஒன்றை நடத்தியது. அடுத்த நூற்றாண்டில் அதிவேகமாக ஓடப்போவது ஆண்களா? அல்லது பெண்களா? என்பதே ஆய்வின் நோக்கம். இதற்காக டாக்டர் ஆன்ட்ருடாட்டம் தலைமையில் விலங்கியல் துறை களத்தில் இறங்கியது. கடந்த கால ஒலிம்பிக்கில் வீரர்,வீராங்கனைகள் ஓடிய நேரம் பற்றிய விபரங்களை திரட்டியது. இதை கணினியில் பதிவு செய்து கணக்கிட்டது. இதில் இன்னும் 150 ஆண்டுகளில் ஆண்கள் ஓடும் வேகம் குறையும் என்று கண்டறியப்பட்டது. அதாவது 100 மீற்றர் ஓட்டத்தில் ஆண்களை விட பெண்கள் அதிவேகமாக ஓடுவார்கள் என்று ஆய்வின் முடிவில் தெரிய வந்தது.

ஒலிம்பிக் வரலாற்றில் 1928 இல் (ஆர்ஸ்டர்டாம்) பெண்களுக்கான 100 மீற்றர் ஓட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. அப்போது அமெரிக்க வீரர்களை எலிசபெத் ராபின்சன் 12.20 வினாடிகளில் கடந்து முதலிடம் பெற்றார். ஆண்களைப பொறுத்தவரை 1896 இல் நவீன ஒலிம்பிக் துவங்கிய காலத்தில் இருந்தே ஓடுகிறார்கள். ஆனாலும் 1900 இல் இருந்துதான் புள்ளி விபரங்கள் உள்ளன. 1900 இல் பாரிசில் நடந்த போட்டியில் அமெரிக்காவின் பிராங்ஜார் விஸ் 11.00 வினாடிகளில் கடந்தார். இதன்படி பார்த்தால் எலிசபெத், ஜார்விஸ் இடையிலான வித்தியாசம் 1.20 வினாடிகள்.



பின்னர் படிப்படியாக இந்த வித்தியாசம் குறைந்து வந்தது. 1952 இல் ஆண்கள் 10.4 மற்றும் பெண்கள் 11.5வினாடிகளிலும் கடந்தனர். இதன் வித்தியாசம் 1.1வினாடி 1988 முதல் 2000 வரை வித்தியாசம் ஒரு வினாடிக்கும் குறைவாகவே இருந்தது. இது 2004 எதென்ஸ் ஒலிம்பிக்கில் 1.08 வினாடியாக அதிகரித்தது. இதற்குப் பெண்கள் பிரிவில் முன்னணி வீராங்கனைகள் பங்கேற்காததும் ஒரு காரணம். தவிர ஜஸ்டினும் 'வேகத்தில்' அசத்தினார்.இம்முறை 100 மீற்றர் ஓட்டத்தில் பெண்கள் பிரிவில் பெலாரசின் யுலியா நெஸ்டரன்கோ 10.93 மற்றும் அமெரிக்காவின் ஜஸ்டின் காட்லின் 9.85 வினாடிகளிலும் கடந்தனர். உலக சாதனையைப் பார்த்தால் 100 மீற்றரில் ஆண்கள் பிரிவில் அமெரிக்காவின் டிம்மான்ட்கோமரி 9.78 வினாடி பெண்கள் பிரிவில் அமெரிக்காவின் புளோரன்ஸ் கிரிபித் ஜாய்னர் 10.49 வினாடிகளிலும் கடந்து சாதித்துள்ளனர்.

இப்படி கடந்த நூற்றாண்டில் ஓடியவர்களது விபரங்கள் கம்ப்யூட்டரில் பதிவு செய்யப்பட்டு ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. இதன்படி வரும் 2008இல் சீனத் தலைநகர் பீஜிங்கில் நடக்க உள்ள ஒலிம்பிக் போட்டியில் வித்தியாசம் 0.84 வினாடியாக இருக்கும் என்று கண்டறியப்பட்டது. ஆண்கள் 9.586 வினாடி முதல் 9.874 வினாடி வரை ஓடலாம். பெண்கள் 10.34 முதல் 10.80 வினாடிகளுக்குள் கடக்கலாம்.

இதே நிலை நீடித்தால் இன்னும் 150 ஆண்டுகளில் அதாவது 2.156 ஒலிம்பிக்கில் முதல் முறையாகப் பெண்கள் ஆண்களை விட விரைவாக ஓடவாய்ப்பு உள்ளது. பெண்கள் 8.079 வினாடிகளிலும் ஆண்கள் 8.098 வினாடிகளிலும் கடக்கலாம். அப்போது சுமார் ஒரு வினாடி வித்தியாசம் ஏற்படும். இதற்கு சற்று முன்னதாக 2064 ஒலிம்பிக்கில் இருந்தே ஆண்களுக்கு வலுவான போட்டியை பெண்கள் கொடுப்பார்கள் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த ஆய்வு பற்றி டாக்டர் டாட்டம் கூறுகையில், "ஆண்களைக் காட்டிலும் பெண்கள் விரைவாக ஓடுவதற்கான வாய்ப்புக்கள் அதிகம் உள்ளன. ஆனாலும் ஊக்க மருந்து உட்கொள்தல், சுற்றுப்புறச் சூழல், உணவு, பழக்க வழக்கங்கள், பயிற்சி போன்றவற்றை எல்லாம் ஆய்வின் போது கணக்கில் எடுத்துக்கொள்ளவில்லை இந்த நூற்றாண்டில் ஆண்,பெண்கள் ஓடிய நேரம் பற்றிய புள்ளி விபரங்கள் மட்டுமே கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட்டன. உலக அளவில் பார்த்தால் தடகளத்தில் அதிகளவில் பெண்கள் பங்கேற்பதில்லை இவர்களது எண்ணிக்கை வரும் காலத்தில் அதிகரிக்கலாம். அப்போது பெண்கள் நிறைய சாதனைகள் படைக்கலாம் தவிர மருத்துவ முன்னேற்றம் அடையும் போது 2.156 இற் குள் ஆண்களைக் காட்டிலும் பெண்கள் வேகமாக ஓடிவிடுவார்கள்" என்றார். இதை ஏற்க வீரர்கள் மறுக்கின்றனர். பெண்கள் வேகமாக ஓடினால் அதைக் காட்டிலும் வேகமாக ஆண்கள் ஓடுவார்கள் என்கின்றனர். இது 'நம்ப முடியாத ஆய்வு' என்கிறார் பிரிட்டனின் முன்னணி தடகள வீரரான டெரக்ரேமண்ட். "100 மீற்றர் ஓட்டத்தில் வித்தியாசம் குறைவதற்கான வாய்ப்பே இல்லை. பெண்கள் விரைவாக ஓடுவார்கள் என்றால் அதைக் காட்டிலும் அதிவேகமாக ஆண்களால் ஓட முடியும். இதனால் பெண் ஆதிக்கம் செலுத்த இயலாது" என்றார் டெரக். ஆக அடுத்த நூற்றாண்டில் மனித குல வரலாற்றில் மகத்தான மாற்றம் நிகழப்போகிறது. ஆண்களே உஷாராக இருங்கள் படிப்பு முதல் பல்வேறு துறைகளில் விட்டுக் கொடுத்தாச்சு; இனி மின்னல் வேக ஓட்டத்திலுமா...!

# சுழல் நாயகனின் சாதனைகள்



இந்திய கிரிக்கெட் வரலாற்றில் நீங்காத இடம் பிடித்தவர்களில் அனில் கும்ளேயும் ஒருவர். 1990 இல் இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ட் போட்டியில் அறிமுகமான இவர் துவக்கத்தில் இருந்தே அணியின் நட்சத்திர வீரராக விளங்கினார்.1999 இல் பாகிஸ்தானுக்கு எதிராக ஒரே இனிங்சில் 10 விக்கெட்டுக்களையும் வீழ்த்தி மாபெரும் சாதனை படைத்தார்.

தற்போது 33 வயதான இவர் அவுஸ்திரேலியாவுக்கு எதிரான முதல் டெஸ்ட் போட்டியில் 400 விக்கெட் என்ற மைல் கல்லை எட்டி மகிழ்ந்தார். தனது சொந்த ஊரான பெங்களூரில் நடந்த இப் போட்டியில் சைமன் கேடிச் விக்கெட்டை கைப்பற்றிய போது இந்தச் சாதனையை படைத்தார். இந்திய அணியில் இச் சாதனையைப் படைக்கும் இரண்டாவது வீரர் என்ற பெருமையையும் கும்ளே பெறுகிறார். முன்னதாக கபில்தேவ் இச் சாதனையைச் செய்துள்ளார்.

அதிக் விக்கெட் வீழ்த்திய இந்திய வீரர்கள் பட்டியலில் கபில்தேவ் 434 விக்கெட்டுக்களுடன் முதல் இடத்தில் உள்ளார். இந்தச் சாதனையைப் படைக்க இவருக்கு 131 போட்டிகள் தேவைப்பட்டன. அடுத்ததாக கும்ளேயின் இலக்கு இது தான். இதனால் 'அதிக விக்கெட் வீழ்த்திய முதல் இந்திய வீரர் கும்ளே' என்ற இனிய செய்தியை நாம் விரைவில் கேட்கலாம்.

டெஸ்ட் வாழ்வில் முதல் 100 விக்கெட்டை கும்ளே 21 போட்டிகளில் கைப்பற்றினார். தனது 200 ஆவது விக்கெட்டை 47 ஆவது போட்டியிலும், 300 ஆவது விக்கெட்டை 66ஆவது போட்டியிலும் வீழ்த்தினார். இப்போது 85 ஆவது போட்டியில் 400 ஆவது விக்கெட்டை எடுத்துள்ளார். இதில் 100, 200 மற்றும் 400 ஆவது விக்கெட்டுக்கள் விழ்த்தியது பெங்களூரில் என்பது குறிப்பிடத்தக்கது. மேலும் சர்வதேச அளவில் 400 ஆவது விக்கெட் வீழ்த்தும் 9 ஆவது வீரர் என்ற பெருமையையும் இவர் பெற்றுள்ளார். இப்பட்டியலில் முதல் இடத்தில் இலங்கையின் முத்தையா முரளிதரன் (537 விக்கெட்) உள்ளார்.

அதிக பட்சமாக இவர் அவுஸ்திரேலியாவுக்கு எதிராக 11 போட்டிகளில் 64 விக்கெட்டுகள் கைப்பற்றியுள்ளார். மொத்தம் 24 முறை ஐந்து விக்கெட்டுக்களும், 5 முறை பத்து விக்கெட்டுக்களும் (இரண்டு இனிங்சையும் சேர்த்து) வீழ்த்தியுள்ளார்

# புதுக்குடியிருப்பு வைத்தியசாலையின் நிலை என்ன? பொது மக்கள் மத்தியிலுள்ள குழப்பத்தை நீக்குக!

(புதுக்குடியிருப்பு)

புதுக்குடியிருப்பு வைத்தியசாலையின் மதில் ஓரமாகவுள்ள பெயர்ப்பலகையில் முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலை எனவும்,



(படப்பிடிப்பு - தவரட்ணம்)

உள்ளேயுள்ள பெயர்ப்பலகையில் கிராமிய வைத்தியசாலை எனவும் உள்ளதால் மக்கள் குழப்பமடைந்துள்ளனர்.

சில விசேட சிகிச்சைகள் இடம்பெறுகின்றபோது மக்கள் எங்கு செல்வது என அறியாது பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

கடந்த 04.10.2004 அன்று வெளியான செய்தியில் முல்லைத்தீவில் உள்ள முல்லை மாவட்ட வைத்தியசாலையில் பற்சிகிச்சை எனக் குறிப்பிடப்பட்டிருந்தது. அவ்வாறாயின் புதுக்குடியிருப்பில் உள்ள வைத்தியசாலையும், முல்லைத்தீவில் உள்ள வைத்தியசாலையும், மாவட்ட வைத்தியசாலைகளா? என மக்கள் கேள்வி எழுப்பியுள்ளனர். மக்களிடையே ஏற்பட்டுள்ள இக் குழப்பநிலையை சம்பந்தப்பட்டவர்கள் நீக்குவார்களா? (08)

# விபத்தில் சிக்கிப் பலியானவர் அடையாளம் காணப்பட்டார்

(அலுவலக செய்தியாளர்)

கடந்த 9ஆம் திகதியன்று இரவு ஏ-9 பிரதானசாலையில் இடம்பெற்ற வாகன விபத்தின் போது பலியாகி அடையாளம் காண்பதற்காக கிளி.மாவட்ட வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டிருந்த சடலம் அடையாளம் காணப்பெற்று சடல பரிசோதனையின் பின் நேற்று முன்தினம் மாலை உறவினரிடம் கையளிக்கப்பட்டது.

மன்னார் பேசாலையைச் சேர்ந்தவரும் உதயநகர் மேற்கில் வசித்து வந்தவருமாகிய செல்லையா விஜயகுமார் (வயது 25) என்ற இளம் குடும்பஸ்தரின் சடலமென வைத்தியசாலையில் வைத்து அவரது மனைவியினால் அடையாளம் காட்டப் பெற்றது.

மேற்படி விபத்துக் குறித்து தமிழீழ காவல்துறை வீதிப் போக்குவரத்துக் கண்காணிப்பு பிரிவினர் விசாரணையினை மேற்கொண்டு வருகின்றனர். (சோ)


## பணிநிலை வேண்டுகை

வருவாய்ப்பகுதி ஆளுகையின் கீழுள்ள கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு, விசுவமடு ஆகிய சந்தைகளில் வரி அறவீட்டாளருக்கான பணிநிலை வெற்றிடமுள்ளது. இவ் வெற்றிடங்களை நிறைவு செய்ய ஆண்களிடமிருந்து கீழ்வருந்தகைமைகளுக்கமைய வேண்டுகைகள் கோரப்படுகின்றன. இப் பணிக்கு விருப்பமுடையோர் தன் வரலாறடங்கிய வேண்டு கையை 2004.10.15ஆம் நாளுக்கு முன் எமக்குக் கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்குமாறு வேண்டப்படுகின்றீர்கள்.

**தகைமைகள்**

01. தமிழ், கணிதம் உட்பட க.பொ.த. சாதாரண தரத்தில் தேறியிருத்தல் வேண்டும். அல்லது ஆண்டு 11இல் கல்விகற்றிருப்பதுடன் யாதேனுமொரு நிறுவனத்தில் இரண்டு ஆண்டுகள் பணியாற்றிய பட்டறிவு இருத்தல் வேண்டும்.
02. அகவை :- 18-35 வரை

*நேர்முகத் தேர்வு நடைபெறும்,*
நாள்:- 2004.10.20
நேரம்:- காலை 10.00
இடம் :- வருவாய்ப்பகுதிச் செயலகம்,
யாழ்சாலை, கிளிநொச்சி.

*வேண்டுகை அனுப்பவேண்டிய முகவரி*
அலுவலர்,
மனிதவள மேம்பாட்டுப்பிரிவு,
வருவாய்ப்பகுதிச் செயலகம்,
கிளிநொச்சி.

01. நேர்முகத் தேர்விற்குக் கடிதம் அனுப்பப்படமாட்டாது.
02. நேர்முகத் தேர்விற்கு வருகை தரும் போது கல்விச்சான்று, அடையாளஅட்டை, பிறப்புச் சான்று, குடும்பப்பதிவு அட்டை என்பன கொண்டு வருதல் வேண்டும்.

ஆளுகை,
மனிதவள மேம்பாட்டுப் பிரிவு,
வருவாய்ப்பகுதி,
நிதித்துறை.

(சி-10263)


# சாரணிய 2 ஆவது சின்னம் பெறுவதற்கான நடைப்பயணம்

கடந்த 28.08.2004 அன்று வற்றாப்பளை மகாவித்தியாலய மாணவர்களின் சாரணிய இரண்டாவது சின்னம் பெறுவதற்கான நடைப்பயணம் நடைபெற்றது.

25கி.மீ தூரம் நடக்கவேண்டிய மாணவர்கள் 35 கி.மீ தூரம் நடைப்பயணம் மேற் கொண்டிருந்தனர். இந் நடைப்பயணத்தினை முல்லை வலயக் கல்விப் பணிப்பாளரும் சாரணர்களுக்கு ஆணையாளராகவுமுள்ள குருகுலராஜா, மகாவித்தியாலயஅதிபர் யோகேஸ்வரன், சாரணியப் பொறுப்பாசிரியர் சி.சிவாகுகன் சாரணிய உதவி ஆணையாளர் வே.ஜெயம்சபாபதி ஆகியோர் பாடசாலையில் வைத்து ஆரம்பித்துவைத்தனர்.

முல்லை மாவட்டத்தில் சிறந்த சாரணர்கள் என்ற பெருமையையும் இப் பாடசாலையே பெற்றுள்ளதோடு ,37 மாணவர்கள் நடைப்பய ணத்தை மேற்கொண்டமையும் குறிப்பிடத்தக்கது. (20)

## கற்றல் உபகரணங்கள் வழங்கல்

முல்லை பொருளாதார அபிவிருத்தி நிறுவனத்தால் கடந்த வெள்ளியன்று குமரபுரத்தில் 15 வறிய மாணவர்களுக்கு பாடசாலை உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.இந்த நிகழ்வில் தேசிய எழுச்சிப்பேரவைச் செயலாளர் சீத்தாராம், வலயப் பொறுப்பாளர் செந்தூரன், முல்லை பொருளாதார அபிவிருத்தி நிறுவன இணைப்பாளர் சுரேஸ்குமார், வெளிக்கள உத்தியோகத்தர் த. தயாபரன் ஆகியோர் கலந்து கொண்டு இவ்வுபகரணங்களை வழங்கினர்.(20)

# நந்தவனம் சே.க.வ.குழு நெற்செய்கைக்கு கடன் வழங்கல்

கல்மடு நகர் நந்தவனம் சேமிப்பு கடன் வழங்கு குழு அப்பகுதி விவசாயிகளுக்கு நெற்செய்கையை ஊக்குவிக்கும் முகமாக ஒரு இலட்சத்து எழுபத்தையாயிரம் ரூபா கடனாக வழங்கியுள்ளது.

மேற்படி நிகழ்வு கடந்த 7 ஆம் திகதி கிளி.கல்மடு நகர் அ.த.க பாடசாலையில் பி.ப.3.30 மணிக்கு சேமிப்புக் குழு தலைவி திருமதி க.இரத்தினேஸ்வரி தலைமையில் நடைபெற்றது. இந் நிகழ்வில் கண்டாவளை பிரதேச கிராம உத்தியோகத்தர் க.ஐங்கரவேல், கல்மடு நகர் கி.சே.தெய்வவேல்- பரமநாதபிள்ளை, பாடசாலை அதிபர் பு.இரவீந்திரன் ஆகியோர் கலந்து கொண்டனர். நன்றியுரையை திருமதி.உதயகுமார் நிகழ்த்தினார். (14)

# பாடசாலை பேருந்து சேவை ஆரம்பிக்கப்பட்டதற்கு பாராட்டு

(விசுவமடு)

விசுவமடுவிலிருந்து கிளிநொச்சிக்கு கடந்த 4ஆம் திகதி தொடக்கம் பாடசாலை பேருந்து சேவை தமிழீழ போக்குவரவுக் கழகத்தினரால் ஆரம்பிக்கப்பட்டதையிட்டு பாடசாலை மாணவர்கள், அரச/ அரசசார்பற்ற நிறுவன உத்தியோகத்தர்கள், பணியாளர்கள் பெரும் மகிழ்ச்சி தெரிவித்துள்ளனர்.

இது வரை காலமும் இவர்கள் தொட்டியடி, கிளிநொச்சி பேருந்தில் பொதுமக்களுடன் சேர்ந்து' பயணிக்கும் போது நின்று கூட பயணம் செய்ய முடியாது மிகுந்த நெருக்கடிக்குள்ளாகி வந்தனர். சில சந்தர்ப்பங்களில் பெருமளவு பொதுமக்கள் இடநெருக்கடியால் ஏற்ற முடியாது விடப்பட்டனர். இச் சேவையால் இவர்களும், பொதுமக்களும் வசதியாகப் பயணிக்க முடிகின்றது. (14)

**- கிளி.மாவட்ட வைத்தியசாலையில் -**

# அரச மற்றும் நிறுவன ஊழியர்களுக்கு சிகிச்சை வழங்க விசேட ஏற்பாடு

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவில் அரச மற்றும் நிறுவன ஊழியாகளுக்கு சிகிச்சை மேற்கொள்வதற்கு சில நடைமுறைமாற்றங்கள் மேற்கொள்ளப்பெற்றுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

மேற்படி விடயம் குறித்து வைத்திய கலாநிதி யூடிரமேஸ்குமார் அவர்களுடன் தொடர்புகொண்டபொழுது அவர் தெரிவிக்கையில்;

வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவில் தினமும் 350 முதல் 450இற்கு மேற்பட்ட நோயாளர்கள் சிகிச்சை மேற்கொண்டு வருகின்றனர். இவ்வேளையில் குறுகிய நேரவிடுப்பில் சிகிச்சை மேற்கொள்ளவரும் அரச மற்றும் நிறுவன ஊழியர்களுக்கு அவர்கள் நலன்கருதி சிகிச்சை வழங்க முன்வரும் போது ஏற்கனவே சிகிச்சைபெறக் காத்து நிற்கும் நோயாளர்களின் மனங்களில் பாரிய தாக்கங்கள் ஏற்பட வாய்ப்புக்கள் உருவாகிவருவதனை அவதானிக்க முடிகின்றது.

எனவே சகலரது நலனையும் கருத்திற்கொண்டு அரச,அரசசார்பற்ற நிறுவன ஊழியர்களுக்கு தினமும் பகல் 12.00 மணி முதல் 1.00 மணிவரை வெளிநோயாளர் பகுதியில் சிகிச்சை வழங்குவதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பெற்றுள்ளன.

எனவேசகலரும்இந் நடைமுறைக்கமைய நடைமுறைகளைக் கைக்கொண்டு வைத்தியசாலை சேவைக்கு ஒத்தாசை நல்கிடும் வண்ணம் வேண்டியுள்ளார்.(சோ,கு)

# 90 வயதிற்கு மேற்பட்ட 16 முதியோர் கரைதுறைப்பற்றில் கௌரவிப்பு

(முல்லை)

கரைதுறைப் பிரதேசச் செயலர் பணிமனையில் 90 வயதுக்கு மேற்பட்ட 16 முதியோர் கடந்த 6ஆம் திகதி கௌரவிக்கப்பட்டனர்.

கரைதுறைப்பற்று உதவி அரச அதிபர் அ.சோதிநாதன் தலைமையில் ஆரம்பமான நிகழ்வில், மங்கல விளக்கினை பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் து.வி.ஜெயக்குலராசா ஏற்றினார்.

இதில் பிரதி மாகாண சுகாதார சேவைப்பணிப்பாளர் து.வி.ஜெயக்குலராஜா, கரைதுறைப் பற்று பிரதேசசபைச் செயலாளர் இ.கிருஷ்ணபிள்ளை, வித்தியானந்தாக்கல்லூரி அதிபர் பே. கணேஸ், உப்புவெளி கிராம அலுவலர் பரஞ்சோதி, குமுழமுனை கிராம அலுவலர் தெய்வேந்திரம், முல்லை மகாவித்தியாலய மாணவன் ம.ஜெறோம், வித்தியானந்தாக்கல்லூரி மாணவி, உதவி அரச அதிபர் தலைமைப்பீட அதிகாரி செல்வி ப. ஆரணி ஆகியோர் கருத்துக்களை வழங்கியதோடு, ஒவ்வொரு வருடமும் முதியவர்களை இந்தக் காலப்பகுதியில் அழைத்து அவர்களைக் கௌரவிக்க வேண்டும் என்றும் முடிவெடுத்தனர்.

இறுதியாக முதியவரான குமுழமுனை மத்தியைச் சேர்ந்த கி.நாகலிங்கம் தனது அனுபவத்தைப் பகிர்ந்து கொண்டார்.

பின்னர் 16 முதியோருக்கும் பரிசுப் பொருட்கள் வழங்கப்பட்டன. நன்றியுரையினை உதவி அரச அதிபர் செயலக நிர்வாகப் பிரதம இலிகிதர் அன்ரன் நிகழ்த்தினார். இந்த நிகழ்வில் அரச, அரசசார்பற்ற நிறுவனப் பிரதிநிதிகள், மக்கள் எனப் பெருமளவானோர் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (20)

# விவசாயிகளின் கோரிக்கைக்காக தி.மு.க.உடன் இணைந்து செயற்படவும் ம.தி.மு.க.தயார்

## வை.கோ.தெரிவிப்பு

(சென்னை)

விவசாயிகளின் பிரச்சினையினை மத்திய மாநில அரசுகளின் கவனத்திற்குக் கொண்டு செல்லும் வகையில் ம.தி.மு.க செயற்படுமென்று அக்கட்சியின் பொதுச் செயலாளர் வை.கோ கூறியுள்ளார். நேற்று முன்தினம் கன்னடத்தில் கட்சியின் சார்பில் நடைபெற்ற 2 நாள் விவசாயிகளின் மாநாட்டில் நிறைவுரையினை ஆற்றிய வேளையே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

நாட்டின் ஒருபகுதி வெள்ளத்தையும் மற்றுமொரு பகுதி வரட்சியையும் சந்தித்து வருகின்றதென்றும் இதனைத் தவிர்ப்பதற்கு தேசிய நதிகளை இணைக்க வேண்டுமென்றும் வை.கோ கூறினார். விவசாயிகளின் கோரிக்கைகளுக்காக தி.மு.க உள்ளிட்ட கட்சிகளுடன் இணைந்து போராடவும் ம.தி.மு.க தயாராகவிருப்பதாகவும் அவர் கூறினார். இம்மாநாட்டின் போது பல தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

# கடலில் கைதான இந்தியர்களிடம் வெடிமருந்து கண்டுபிடிப்பு

## சிறிலங்கா கடற்படை தெரிவிப்பு

(கொழும்பு)

சட்டவிரோதமாக இலங்கைக் கடற்பரப்பினுள் புகுந்த இந்தியர்கள் தொடர்பாக தேசிய புலனாய்வுப் பிரிவும் காங்கேசன்துறைப் பொலிசாரும் இணைந்து விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

இலங்கைக் கடற்படையினர் இவர்களை நேற்று முன்தினம் யாழ். கடல்நீரரியினை அண்மித்த கடற்பிரதேசத்தில் வைத்து கைது செய்தனர். கைது செய்யப்பட்ட இவர்களிடமிருந்து வெடிபொருட்களும் கடற்படையினரால் கைப்பற்றப்பட்டதாக கடற்படையின் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

கைது செய்யப்பட்ட இவர்கள் நேற்று முன்தினம் பொலிசாரிடம் ஒப்படைக்கப்பட்டதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார். இவர்கள் காங்கேசன்துறை நீதிமன்றத்தில் நேற்று ஆஜர்படுத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

# சமூகப்பிளவை ஏற்படுத்த பா.ஜனதாக் கட்சி முயற்சி

## - மன்மோகன்சிங் குற்றச்சாட்டு

(சென்னை)

மதம் மற்றும் சாதியின் பெயரால் சமூகத்திலுள்ள பல்வேறு தரப்பு மக்களிடம் பா.ஜ.கட்சி பிளவை ஏற்படுத்துவதாகப் பிரதமர் மன்மோகன்சிங் குற்றம்சாட்டியுள்ளார்.

நேற்றுமுன்தினம் மகாராஸ்டிராவில் காங்கிரஸ், தேசியவாத காங்கிரஸ் கூட்டணியினை ஆதரித்துத் தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் பேசியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார். மேலும் தெரிவிக்கையில் நாடாளுமன்றத்தில் அக்கட்சியினர் பொறுப்பற்ற முறையில் நடந்துகொண்டு அவையை நடத்தவிடாமல் மிரட்டினார்கள் என்று கூறினார்.

விதர்லா, மாராட்டுவாடா உள்ளிட்ட பின்தங்கிய மக்களின் பிரச்சினைகளை மத்தியிலுள்ள ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு அறிந்துள்ளதென்றும் இந்தப் பகுதியின் வளர்ச்சியைத் தாம் தனிப்பட்ட முறையில் கண்காணிக்க விருப்பதாகவும் நாட்டின் பல்வேறு பகுதிகளில் வரட்சியின் காரணமாக விவசாயிகள் தற்கொலை செய்து கொள்வதைத் தடுக்கும் வகையில் அவர்களுக்கென குறைந்த வட்டி வீதத்தில் விவசாயக் கடன் வழங்கப்படும் என்றும் பிரதமர் கூறியுள்ளார்.

# அயர்லாந்து நடைமுறையில் காஷ்மீர் பிரச்சினைக்குத் தீர்வு

## -முன்னாள் அமைச்சர் யோசனை

(புதுடில்லி)

அயர்லாந்து நடைமுறையில் காஷ்மீர் பிரச்சினைக்கு சுமுகத் தீர்வுகாண முயற்சிக்காலமென்று இந்தியாவின் முன்னாள் வெளியுறவுத்துறை அமைச்சர் ஒருவர் யோசனை கூறியுள்ளார்.

டில்லியில் நடைபெற்ற தெற்காசியப் பத்திரிகையாளர் சங்கத்தின் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு பேசிய முன்னாள் வெளியுறவு அமைச்சர் சல்மான் குஷ்ஷி காஷ்மீர் பிரச்சினைக்குச் சரியான தீர்வு காண்பது கடினமென்று குறிப்பிட்டார். பல ஆண்டுகளுக்கு மேலாகவுள்ள காஷ்மீர் பிரச்சினை சிக்கலான தென்பதை இந்தியாவும் பாகிஷ்தானும் ஏற்றுக் கொள்ளவேண்டுமென்றும் அவர் தெரிவித்தார்.

தென்னாபிரிக்கா, வியட்னாம், பலஸ்தீனம் உள்ளிட்ட நாடுகளில் இத்தகைய பிரச்சினைகளுக்கு வெற்றிகரமாக சுமுகத் தீர்வுகள் காணப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார். இலக்கு ஒன்றைப் பின்பற்றி காஷ்மீர் பிரச்சினைக்கு தீர்வு காணமுயற்சிக்கலாமென்றும் இதற்கு அயர்லாந்துப் பாணி சிறந்ததாக இருக்கும் என்றும் சல்மான் குஷ்ஷி தெரிவித்தார்.

# தமிழை மத்தியில் ஆட்சிமொழியாக்க முயற்சிக்கப் போகிறேன்- கருணாநிதி

(சென்னை)

தமிழை மத்தியில் ஆட்சி மொழியாகவும் மாநிலத்தில் கட்டாய மொழியாகவும் மாற்றுவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்போவதாக தி.மு.க தலைவர் கருணாநிதி கூறியுள்ளார்.

சென்னையில் இடம்பெற்ற வைபவமொன்றில் கலந்துகொண்டு பேசுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் தமிழ் உள்ளிட்ட அனைத்து மொழிகளையும் மத்தியில் ஆட்சி மொழியாக அறிவிக்க வேண்டுமென்றும் தமிழ் அறிஞர்கள் கோரிக்கைகளினை வைத்துள்ளனரென்றும் இதற்காக தி.மு.க போராடும் என்றும் கூறியதுடன் தற்போதுள்ள மத்தியரசு பாராட்டுவதற்கான வாய்ப்பினைத் தெரிவிக்காது வாதாடும் நிலையிலேயே கோரிக்கையை ஏற்கும் நிலையிலும் உள்ளதென்றும் அவர் தெரிவித்தார்.


## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
## வழங்குநர்களையும் ஒப்பந்தகாரர்களையும் பதிவு செய்தல் - 2005

கீழே குறிப்பிடப்பட்டுள்ள வழங்கல்களையும் சேவைகளையும் வழங்குவதற்கு யாழ். பல்கலைக் கழகத்துடன் தம்மை பதிவுசெய்துகொள்ள விரும்பும் பிரபல்யமான வழங்குநர்கள்/ உற்பத்தியாளர்கள்/ ஒப்பந்தக்காரர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் 2004 நவம்பர் 30ஆம் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

**வழங்கல்கள்**

1. எழுதுபொருட்கள்
2. புத்தகங்கள், பருவ வெளியீடுகள், ஏனைய வெளியீடுகள்
3. அலுவலகத் தளபாடம், மரம்
4. அலுவலக உபகரணம் (ஸ்ரீல்)
5. அலுவலக இயந்திரங்கள் (தட்டச்சு இயந்திரங்கள், கல்குலேட்டர்கள், பிரதி பண்ணும் இயந்திரங்கள், போட்டோக் கொப்பி இயந்திரங்கள், தொலைநகல் கருவிகள் முதலியன)
6. சகல வகையான ஹாட்வெயார் பொருட்கள்
7.பெயிண்டுகள் வாணிஸ்
8. இயந்திரக் கருவிகளும் உதிரிப்பாகங்களும்
9. மின்சார சாதனமும் உதிரிப்பாகங்களும்
10. வெட்டும் கருவிகளும் மட்பாண்டங்கள் உட்பட சமையலறைப்பாத்திரங்கள்
11. ஜவுளிகள், ஜன்னல் திரைச்சீலைகள், சீருடைத்துணிகள்
12. ஆய்வுகூடச் சாதனங்கள்
13. இரசாயனப்பொருட்களும், கண்ணாடிச் சாதனங்களும்
14. மரங்கள்- தீராந்தி, பனை மரம், சீலாகைகள்
15. கட்டடப் பொருட்கள் (மணல், செங்கல், உலோகம், சுண்ணாம்பு) முதலியன
16. தும்புத்தடி, விளக்குமாறு, கால்துடைப்பங்கள் முதலியன
17. டயர் ரியூப்புக்கள், பற்றரிகள்
18. மோட்டார் உதிரிப்பாகங்கள், துணை உறுப்புகள்
19. ஆயுர் வேத மருந்துகள்
20. மருந்துகளும் மருத்துவ வழங்கல்களும்
21. விளையாட்டு மற்றும் நன்புரி பொருட்கள்
22. தீயணைப்புச் சாதனங்களும், பாதுகாப்புச் சாதனங்களும்
23. மழைக் கோட்டுக்கள், சேற்று சப்பாத்துகள், குடைகள், சம்பாத்துக்கள் முதலியன
24. பைப்புக்கள், பைப் இணைப்புக்கள்
25. பிளாஸ்டிக், பைபர் கிளாஸ் உற்பத்திகள்
26. மட்பாண்டப் பொருட்கள் கண்ணாடிப்பொருள்கள் கண்ணாடிகள்
27. தோட்டவேலைகளுக்கான பசளைகள்,இரசாயனங்கள் கருவிகள்
28. கணினி உட்பட எலற்றோனிக் பொருட்கள்
29. கணினி மேசை, கதிரைகள்

**சேவைகள்.**

1. அச்சிடுதல், புளோக் செய்தல், றப்பர் ஸ்டாம்புகள், திகதி ஸ்டாம்புகள்
2. அலுவலக இயந்திரங்கள் மற்றும் சாதனங்கள் (தட்டச்சு இயந்திரங்கள், புகைப்பட பிரதிபண்ணும் இயந்திரங்கள், பக்ஸ், கம்பியூட்டர், மின்தட்டச்சு இயந்திரங்கள்) திருத்த வேலைகள்
3. குளிர்சாதனப் பெட்டிகள் எயார் கொண்டிசநர்கள் திருத்த வேலைகளும் பராமரிப்புகளும்
4. ஸ்ரீல் தளபாட திருத்த வேலைகள்
5. மரத்தளபாட திருத்த வேலைகள்
6. கதிரைகள் பின்னுதல்
7. உடைகள், கதவு ஜன்னல் திரைச்சீலைகள் தைத்தல்
8. பெயர்ப்பலகைகள் வரைதலும் பிளாஸ்ரிக் பெயர்ப்பலகை செய்தலும்
9. உடைகளைச் சலவை செய்தல்
10. புத்தகங்களையும் பருவ வெளியீடுகளையும் பைண்டிங் செய்தல்
11. மோட்டார் வாகனம் திருத்தல்
12. கணினி திருத்த வேலை

**எந்திரவியல் சேவைகள்**

1. மின்மோட்டார் நீர் இறைக்கும் இயந்திரங்கள், மின்விசிறிகள் ஜெனரட்டர்க்கள் திருத்துதல்.
2. குடிசார் இயந்திரவியல் சேவைகள் (கட்டடங்கள் நிர்மாணித்தலும் திருத்தவேலைகளும்)

* இச் சேவைக்கு மட்டும் ICTAD பதிவின் பிரதி சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

3. மின்சார வயரிங் வேலைகள்
4. நீர் விநியோக வடிகால் அமைப்பு வேலைகள் மற்றும் திருத்த வேலைகள்
5. இரும்பு, அலுமினியம் என்பவற்றாலான கட்டடம் சார்ந்த பொருத்துக்கள் செய்தலும் பொருத்தலும்
6. கட்டடங்கள்/ கட்டடச் சேவைகள் மற்றும் அவற்றுடன் தொடர்புடைய இயந்திரசாதனங்களுக்கான உசாத்துணைச் சேவைகள்.
7. நிலையாகப் பொருத்தப்பட்ட மரத்தளபாடங்கள் வளங்கல்/ பொருத்தல்/ தச்சுவேலை
8. எந்திரவியல் சார் வரைதலும் நீலப்பிரதி செய்தலும்
9. கறையான்/ பீடைகள் ஒழிப்பு வேலைகள்
10. தொழிலாளர் வழங்கல் (தரம்சார், தரம்சாரா காவலாளிகள்)

**பதிவு தொடர்பான நிபந்தனைகள்**

1.கடித உறையின் இடது பக்கமேல் மூலையில் **"வழங்கல்கள் சேவைகள் 2005"** எனக்குறிப்பிட்டு பதிவுத்தபால் மூலம் சகல விண்ணப்பங்களும் பின்வருமாறு சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

*. வழங்கல்களுக்கும்சேவைகளுக்குமான விண்ணப்பங்கள் **நீதியாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி, யாழ்ப்பாணம்"** என முகவரியிடல் வேண்டும்.

*. எந்திரவியல் சேவைகளுக்குமான விண்ணப்பங்கள் வேலைகள் எந்திரவியலாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், த.பெ.இல 57, திருநெல்வேலி யாழ்ப்பாணம் என முகவரியிடப்படல் வேண்டும்.

2. ஒவ்வொரு வழங்கல் அல்லது சேவைகளுக்கும் தனித்தனியாக விண்ணப்பம் அனுப்பப்பட வேண்டும். ஒவ்வொரு விண்ணப்பப்படிவத்துடன் பதிவுக்கட்டணமாக ரூபா 500 பெறுமதியான காசுக்கட்டளை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் என்னும் பெயருக்குப் பெறப்பட்டு யாழ். தபால் கந்தோரில் மாற்றக்கூடியதாக இணைத்து அனுப்புதல் வேண்டும்.
3. விலை மனுக்கள் பதிவுசெய்யப்பட்ட வழங்குனர்களிடமிருந்தே கோரப்படும். ஆயினும் வேறிடங்களில் இருந்து விலை மனுக்களைக் கோரப்பல்கலைக்கழகத்திற்கு உரிமையுண்டு.
4. கோரப்படும் போது விலைமனுக்களை சமர்ப்பிக்கத் தவறும் அல்லது உரிய நேரத்திற்குப் பொருட்கள்/ சேவைகளை வழங்கத் தவறும் அல்லது குறிப்பிடப்படும் மாதிரிகளுடன் ஒத்திராத பொருட்கள்/ சேவைகளை வழங்கும் எந்தவொரு வழங்குநரின் பெயரும் முன்னறிவித்தலின்றி பதிவுப் புத்தகத்தில் இருந்து நீக்கப்படும்.

5 ஒவ்வொரு விண்ணப்பமும் பின்வரும் தகவலைக் கொண்டிருத்தல் வேண்டும்

1. விண்ணப்பிக்கும் வழங்கும்/ சேவை
2. பெயரும் விலாசமும்
3. தொலைபேசி இலக்கம்
4. வியாபாரப் பதிவின் இலக்கமும் திகதியும் (வியாபாரப் பதிவுப்பத்திரத்தின் பிரதி இணைக்கப்படல் வேண்டும்
5. வியாபாரத்தின் தன்மை
6. வங்கியாளர்களின் பெயர்
7. கிடைக்கக்கூடிய கடன்வசதிகள்
8. ICTAD பதிவு இலக்கம்/ புத்தக இலக்கம் (எந்திரவியல் சேவை இரண்டிற்கு மட்டும்)


**குறிப்பு:**
வியாபார பதிவுப் புத்தகத்தின் பிரதி இணைக்கப்படாத விடத்து பதிவு விண்ணப்பம் நிராகரிக்கப்படும்

6. விண்ணப்பதாரர் யாழ். பல்கலைக்கழக வவுனியா வளாகத்தில் வேலைகளைச் செய்ய ஆர்வமாக இருத்தல் அது பற்றி விண்ணப்பத்தில் குறிப்பிடவேண்டும். அத்துடன் அம் மாவட்டத்திலுள்ள தமது கிளை/ பிரதான காரியாலய விலாசம் அம் மாவட்டத்திற்குரிய வியாபாரப்பதிவு அத்தாட்சியுடன் சமர்ப்பிக்கவேண்டும்
7. விண்ணப்பதாரரின் ஸ்தாபனத்தில் நிரந்தரமாக வேலை செய்யும் சகல எந்திரவியலாளர் கட்டடக்கலைஞர் ஆகியோரின் பெயர் அனுபவங்களை (எந்திரவியல் சேவைகள் இலக்கம் 6இற்கு மட்டும்) தருக.
8. சேவைகளை/ வழங்கல்களுக்கான கொடுப்பனவுகள் விண்ணப்பத்தில் பதிவு செய்யும் பெயரிலேயே வழங்கப்படும்.
9. மேலதிக விபரங்களுக்கு சிரேஷ்ட உதவி (வழங்கல்) நிதியாளருடன் தொடர்பு கொள்ளவும். தொ.பே.இல. 0212222644

**பதிவாளர், யாழ்ப்பாணப்பல்கலைக்கழகம்.**

(சி.10264)

# அவுஸ்திரேலியாவுக்கு எதிரான சென்னை டெஸ்ட் டெண்டுல்கர் பங்கேற்பது சந்தேகமே



உலகின் தலைசிறந்த துடுப்பாட்ட வீரர்களில் ஒருவராகத் திகழ்பவர் சச்சின் டெண்டுல்கர் இடது முழங்கையில் (டென்னிஸ் எல்போ) ஏற்பட்டுள்ள காயம் காரணமாக அவர் மிகவும் அவதிப்பட்டு வருகிறார்.

இந்தக் காயம் காரணமாக நெதர்லாந்தில் நடந்த 3நாடுகள் போட்டி இங்கிலாந்து தொடர் மற்றும் ஐ.சி.சி சம்பியன் டிராவி போட்டியில் ஆடவில்லை. காயத்தில் இருந்து முற்றிலும் குணம் அடையாததால் அவுஸ்திரேலியாவுக்கு எதிராகப் பெங்களூரில் நடந்த முதல் டெஸ்டில் ஆடவில்லை.

இந்நிலையில் வருகிற 14தொடக்கம் 18ஆம் திகதிவரை சென்னையில் நடைபெறும் 2ஆவது டெஸ்டிலும் டெண்டுல்கர் விளையாட மாட்டார் என்றே தெரிகிறது.

பெங்களூரைச் சேர்ந்த பிரபல எலும்புச்சிகிச்சை நிபுணர் டாக்டர் பிரேம்சந்த் அவரைப் பரிசோதித்தார்.

சென்னை டெஸ்டில் டெண்டுல்கர் விளையாடுவதற்கான வாய்ப்பு 50சதவீதம்தான் என்று அவர் தெரிவித்தார். இது தொடர்பாக டெண்டுல்கர் கூறும்போது இதுவரை நான் பயிற்சி பெறவில்லை. துடுப்பாட்டப் பயிற்சி பெறும் போது வலியிருக்கும் என்று டாக்டர் கூறியுள்ளார். அவரது ஆலோசனைபடி நடப்பேன் என்றார்.

நாக்பூரில் வருகிற 26ஆம் திகதி தொடக்கம் 30ஆம் திகதி வரை நடைபெறும். 3ஆவது டெஸ்டில் டெண்டுல்க்கர் ஆடுவார் என்று தெரிகிறது. இதற்கிடையே அவுஸ்திரேலியாவுக்கு எதிரான தொடர் முழுவதும் அவர் ஆடமாட்டார் என்று மற்றொரு தகவல் கூறுகிறது.

டெண்டுல்கர் ஆடாததால் இந்தியஅணி துடுப்பாட்டத்தில் பலவீனமடைந்து காணப்படுகிறது. மிடில்ஆர்டர் வரிசை ஆட்டம் கண்டுள்ளது. ஏற்கனவே மோசமாக ஆடிவரும் இந்திய துடுப்பாட்டக்காரர்கள் கூடுதல் நெருக்கடியைச் சந்திக்க வேண்டிய நிலையிலுள்ளனர்.

# சச்சினின் வருகையை எதிர்பார்த்துள்ளோம்

**– ஹர்பஜன்சிங்**



தோற்றாலும் நம்பிக்கை இழக்கவில்லை என்கிறார் ஹர்பஜன்சிங். கடந்த முறை அவுஸ்திரேலிய அணி இங்கு வந்தபோதும் முதல் டெஸ்ட்டில் தோற்றோம். பின்னர் அடுத்தடுத்த டெஸ்டில் வெற்றிபெற வில்லையா? இம்முறையும் அப்படிச் செய்வோம் துடுப்பாட்டக்காரர்கள் ஓட்டங்களை எடுக்காதது நமது தோல்விக்குக் காரணம். சச்சின் வருகையை நாங்கள் எதிர்பார்த்துக் காத்திருக்கிறோம். எப்படிப்பட்ட ஆடுகளங்களிலும் தனிநபராக அவர் 100-200 ஓட்டங்கள் ஆடக்கூடியவர். அவர் வந்தால் இந்திய அணியே மாறிவிடும். எங்கள் ஆட்டமும் வித்தியாசமாக இருக்கும். சென்னை டெஸ்ட்டில் அவர் கட்டாயம் பங்கேற்பார் என்று நம்பிக்கை இருக்கிறது. அவரும் நம்பிக்கையுடன் இருக்கிறார். என்றார் சிங்.

# சென்னை டெஸ்ட் போட்டியில் வெற்றிபெற்று இந்திய அணி நல்லநிலைக்குத் திரும்பும்

**கங்குலி**



அடுத்த டெஸ்ட் போட்டிகளில் இந்திய அணி வெற்றி பெற்று நல்ல நிலைக்கு திரும்பும் என்று கங்குலி நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

பெங்களூரில் நடந்த அவுஸ்திரேலியாவுக்கு எதிரான முதல் டெஸ்ட் போட்டியில் இந்திய அணி 217 ஓட்டம் வித்தியாசத்தில் தோல்வி கண்டது.தோல்வி குறித்து இந்திய அணித் தலைவர் கங்குலி கூறியதாவது:-

இந்த டெஸ்டில் இந்திய அணி வீரர்கள் சிறப்பாக ஆடவில்லை கடந்த 3,4மாதங்களாகவே அணியின் ஆட்டம் நன்றாக இல்லை. வீரர்கள் அனைவரும் போட்டித் தொடரை நமக்கு சாதகமாகத் திருப்ப வேண் டும் என்பதில் ஆர்வமாக உள்ளனர்.


இன்னும் 3ஆட்டங்கள் இருக்கின்றன. அதில் இந்திய அணி சிறப்பாக ஆடி நிலைமையை மாற்றும் அதற்கான திறமை அணி வீரர்களிடம் உள்ளது.

முதல் டெஸ்டில் அவுஸ்திரேலிய அணியின் துடுப்பாட்டம் சிறப்பாக இருந்தது. முதல் இன்னிங்சில் நமது துடுப்பாட்டம் நன்றாக இருந்திருந்தால் ஆட்டம் நம் கையை விட்டுப் போயிருக்காது.

சென்னையில் நடைபெறும் 2ஆவது டெஸ்ட் போட்டியில் டெண்டுல்கர் ஆடுவாரா? என்பது பற்றி இப்போது உறுதியாகக் கூறமுடியாது.பொறுத்திருந்து பாருங்கள். அவரது உடல் தகுதியில் முன்னேற்றம் ஏற்பட்டுவருகிறது.அவர் ஆட தகுதி பெறுவார் என்று நம்புகிறேன் என்றார்.

# நடுவர்பணி மிகமிகக் கடினமானது தோல்விக்கு அவர்களைக் காரணமாக்காதீர்

**அடம்கில்கிறிஸ்ட்**



மிகமிகக் கடினமானது நடுவர்பணி; ஆதலால் தோல்விக்கு அவர்களைக் காரணமாகக் கூறாதீர்கள் என கருத்துத் தெரிவித்துள்ளார். அவுஸ்திரேலிய அணித் தலைவர் அடம் கில்கிறிஸ்ட் முதல் டெஸ்டில் கடினமான முடிவுகளை இந்திய அணியினர் எதிர் கொண்டனர். ஆனால் சந்தேகத்தின் பலன் ('பெனிபிட் ஆ.ஃ.ப் டவுட்') அடிப்படையிலேயே அம்முடிவை அவர் மேற்கொண்டிருப்பார். அவர்களை குற்றஞ்சொல்லக் கூடாது. நாங்களும் 2001 தொடரில் இம்மாதிரி கடிமான தீர்ப்புகளை எதிர்கொண்டோம். ஆனால் அதை ஏற்றுத் தான் தீரவேண்டும்.

கல்கத்தாவில் 2001இல் நடைபெற்ற அப்போட்டியின் 3ஆம் நாள் ஆட்டத்தில் நிகழ்ந்ததைச் சரியாக என்னால் கூறமுடியவில்லை. ஹர்பஜன் சிங் 'ஹாட்ரிக்' பெற்ற சூழல் அது.

அப்போது வழங்கப்பட்ட எல்.பி.டபிள்யு முடிவு எங்களுக்கு எதிராகத்தான் இருந்தது. ஆனால் அதை ஏற்றுத்தான் ஆக வேண்டும். நடுவர்களைக் குறைசொல்லக் கூடாது. இந்தியவீரர்களின் உணர்வுகள் எனக்குப் புரிகிறது. ஆனால் அதைசந்தேகத்தின் பலன் அடிப்படையில் நடுவர் மேற்கொண்டதாகக் கருதி விட்டுவிடவேண்டும் என்றார். நடுவரின் தவறானதீர்ப்புக்களினால் தான் பதான், சேவாக் ஆகியோர் ஆட்டமிழந்தனர் என்ற சர்ச்சை நிலவி வருகிறது என்றார்.

# இந்திய ஹொக்கி அணிக்கு ஆறுதல் வெற்றி பாகிஸ்தான் தொடரைக் கைப்பற்றியது



பாகிஸ்தானுக்கு எதிரான கடைசி டெஸ்ட் ஹொக்கி போட்டியில் இந்திய அணி 2-0 என்ற கோல் கணக்கில் ஆறுதல் வெற்றி பெற்றுக் கொண்டது.

இந்தியா-பாகிஸ்தான் அணிகள் இடையே 8 டெஸ்ட் ஹொக்கி போட்டி கொண்ட தொடர் நடத்தப்பட்டது.இதில் பாகிஸ்தான் 4-1என்ற கோல் கணக்கில் தொடரைக் கைப்பற்றியது.

இந்த நிலையில் டெஸ்ட் ஹொக்கியின் 8ஆவது மற்றும் கடைசி ஆட்டம் ஐதாரபாத்தில் நேற்று முன்தினம் இரவு நடந்தது.

தொடக்கம் முதலே இந்திய அணி வீரர்களின் ஆட்டம் அபாரமாக இருந்தது.இதன் பலனாக 17ஆவது நிமிடத்தில் இந்திய அணி முதல் கோல் போட்டது .சந்தீப் மைக்கேல் இந்த கோலை அடித்தார்.21ஆவது நிமிடத்தில் இந்திய அணி மீண்டும் ஒரு கோல் அடித்தது துஷர்கண்டேகர் இந்த கோலை போட்டார். இந்த போட்டி தொடரை பாகிஸ்தான் 4-2என்ற கணக்கில் தனதாக்கியது.பரிசளிப்பு விழாவில் ஆந்திர முதல் அமைச்சர் ராஜசேகரரெட்டி கலந்து கொண்டு பரிசு கோப்பை வழங்கினார்.

## பெண்கள் அணி சாதனை

உலக நீச்சல் போட்டி அமெரிக்காவில் நடந்து வருகிறது. இதன் பெண்களுக்கான 4X100மீற்றர் மெட்லே ரிலேவில் அவுஸ்திரேலிய அணி 3நிமிடம் 54.95வினாடியில் பந்தய துாரத்தை கடந்து புதிய சாதனை படைத்து முதலிடம் பிடித்தது.இதற்கு முன்பு 2002ஆம் ஆண்டில் மொஸ்கோவில் நடந்த உலக போட்டியில் சுவீடன் அணி 3 நிமிடம் 55.78 வினாடியில் கடந்ததே சாதனையாக இருந்தது.

## மழையால் பாதிப்பு

பாகிஸ்தானில் நடைபெற்று வரும் பாக்டெல் முக்கோண கிரிக்கெட் தொடரில் சிம்பாப்வே, சிறிலங்கா அணிகளுக்கிடையிலான நேற்றைய போட்டி மழை காரணமாக கைவிடப்பட்டது.

இதன் அடிப்படையில் இறுதிப் போட்டியில் விளையாட பாகிஸ்தான், சிறிலங்கா அணிகள் தகுதி பெற்றுள்ளன.

# நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்றதே எமது வெற்றிக்குப் பிரதான காரணம்

**ஜான் புக்கானன்**

டெஸ்ட்தொடரை வெற்றியுடன் துவக்கிய மகிழ்ச்சியில் இருக்கிறார். அவுஸ்திரேலியக் கிரிக்கெட் பயிற்சியாளர் ஜான்புக்கானன் 'இந்த வெற்றியின் ரகசியம் என்ன?' என்று அவரிடம் கேட்டால்... 'நாணயச்சுழற்சியில் வென்றது முக்கியமான விடயம். நாணயம் வென்றது முதலில் துடுப்பாட்டத்தைத் தீர்மானித்தது தான் அடிப்படையே. எங்கள் துடுப்பாட்டக்காரர்கள் நல்ல ஓட்டங்களை எடுத்ததால் பந்து வீச்சாளர்கள் சுதந்திரமாக செயற்பட முடிந்தது. வெற்றியும் கிடைத்தது' என்கிறார்.







கடந்த 04.10.2004 அன்று முல்லைத்தீவு மகாவித்தியாலய மைதானத்தில் மூத்த தளபதிகளான குமரப்பா, புலேந்திரன் உட்பட பன்னிருவேங்கைகளின் 17ஆம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு நடாத்தப்பட்ட கரப்பந்தாட்டப்போட்டியில் வெற்றியீட்டிய புதுக்குடியிருப்புப் பிரதேச அணியினருடன் தமிழீழ விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் பாப்பா, விளையாட்டுத் துறையைச் சேர்ந்த பத்மநாதன், இவ்வணிக்குப் பொறுப்பாக உள்ள ஜான் ஆகியோருடன் வீரர்கள் காணப்படுகின்றனர். (20)

# லெப். கேணல் விக்டர் ஞாபகார்த்த கால்பந்து; அரையிறுதி, இறுதிப் போட்டிகள் இன்று

லெப். கேணல் விக்டர் அவர்களின் 18ஆவது ஆண்டு நிறைவு தினத்தை முன்னிட்டு பனங்கட்டுகொட்டு சென்யோசப் விளையாட்டுக்கழகத்தால் நடாத்தப்பட்டுவரும் வெற்றிக் கிண்ணத்திற்கான உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியின் முதலாவது அரை இறுதி ஆட்டத்தில் சென்யோசப் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து தாழ்வுபாடு புனித அந்தோனியார் விளையாட்டுக்கழகமும், இரண்டாவது அரையிறுதியில் பள்ளிமுனை புனித லூசியா விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து உப்புக்குளம் சித்தி விநாயகர் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. இப்போட்டிகள் இன்று மன்னார் விளையாட்டு அரங்கில் நடைபெறும்.

இப்போட்டியில் வெற்றி பெறும் அணிகளுக்கிடையிலான இறுதிப் போட்டி இன்று மாலை நடைபெறும்.



### சிந்தனைக்கு

சமுகநீதி சரிவரப் பேணப்பட்டால் தான் சமுதாயம் ஒரு உன்னத நிலைக்கு வரும்.

தமிழீழ தேசியத் தலைவர்

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ்.சாலை,கிளிநொச்சி. 12-10-2004
தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் Daily@ eezhanatham. com

## சாக்குப் போக்கு வேண்டாம்!

சாட்டுப்போக்குச் சொல்லிக் காலத்தைத் தாழ்த்தாது விடுதலைப்புலிகளுடன் சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்குமாறு எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க சனாதிபதி சந்திரிகாவிடம் கோரிக்கை விடுத்துள்ளார். நேற்று முன்தினம் இரவு இந்தியாவிற்குப் புறப்பட்டுச்செல்லும் முன்பாக சனாதிபதி சந்திரிகாவிற்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் இதனை அவர் தெரிவித்துள்ளார்.

சனாதிபதி சந்திரிகா தேசிய ஆலோசனைக்குழுவில் அங்கம் வகிப்பது குறித்து மீண்டும் பரிசீலிக்குமாறு விடுத்திருந்த கோரிக்கைக்குப் பதிலளிக்கும் வகையில் எழுதிய கடிதத்திலேயே எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க இக்கோரிக்கையை விடுத்துள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவும், ஐ.தே கட்சியின் சார்பில் ஊடகவியலாளரை அடிக்கடி சந்திக்கும் பேராசிரியர் பீரிஸ் அவர்களும் அரசாங்கம் பேச்சுவார்த்தைகளை உடன் ஆரம்பிக்க வேண்டும் என அடிக்கடி வலியுறுத்தி வந்துள்ளனர். இந்நிலையில் மீண்டும் ஒரு தடவை இக்கோரிக்கைக் கடிதம் மூலம் ரணில் கோரியுள்ளார் எனலாம்.

ஆனால் இக்கடிதமானது எழுதப்பட்ட காலகட்டம் முக்கியமானதாகும். எவ்வாறெனில் இந்திய அரசின் அழைப்பை ஏற்றுப் பயணம் புறப்படுவதற்கு முன் இக்கடிதம் எழுதப்பட்டுள்ளமையும் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அரசாங்கம் தேசிய ஆலோசனைச் சபை ஒன்றை அமைத்து இனப்பிரச்சினை தீர்விற்கென ஆலோசனைகளை நடாத்தி வருகையில் இக்கடிதம் எழுதப்பட்டுள்ளமையும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

ரணில் விக்கிரமசிங்கவின் இக்கடிதம் மூலம் சில விடயங்களில் அவர் உறுதியாக இருப்பது தெளிவாகின்றது. முதலாவதாக ஏற்கனவே தயாரிக்கப்பட்ட இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை நகல்திட்டத்தின் அடிப்படையில் பேச்சுக்களை ஆரம்பிப்பதென்பதில் அவர் தெளிவாக உள்ளார். இது சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அமைத்துள்ள தேசிய ஆலோசனைச் சபைப் பேச்சுககான திட்டநகல் ஒன்றை தயாராக்க வேண்டிய தேவை அற்றதொன்றாகின்றது. அதாவது இவ் ஆலோசனைச் சபையில் கலந்து கொள்வது காலவிரயம் எனச் சுட்டுகின்றது.

அடுத்ததாக ரணில் விக்கிரமசிங்க இக்கடிதத்தினை இந்தியா புறப்படுவதற்கு முன்பாக எழுதியுள்ளமையும் ஒரு வகையில் அரசியல் முக்கியத்துவம் மிக்க தொன்றாகவே கொள்ளத்தக்கதாகும். ஏனெனில் இக்கடிதமானது தனது அரசியல் நிலைப்பாடு குறித்து அவர் செய்துள்ள கொள்கைப்பிரகடனமாகக் கூடக் கொள்ளத்தக்கதாகும்.

எதிர்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, இந்திய அரசின் உத்தியோக பூர்வ அழைப்பை ஏற்றே இந்தியாவிற்கு விஜயம் மேற்கொள்கின்றார். இந்நிலையில் இதுகுறித்து ஆரூடம் கூறும் இராஜதந்திர வட்டாரங்கள் இந்திய அரசு சமாதான முயற்சிகளில் ஆர்வம் காட்ட முற்பட்டுள்ளதன் விளைவாகவே ரணில் அழைக்கப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கின்றன.

ஆகையினால் இந்திய அரசு எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுடன் பேச்சுக்களை நடத்தும் போதும் அவரிடம் இருந்து சில விட்டுக்கொடுப்புக்களை எதிர்பார்க்கக் கூடும். அதாவது சனாதிபதியுடன் இணைந்து செயற்படுமாறு கோரக்கூடும். ஆனால் இது சாத்தியப்படானதல்ல என்பதையே அவர் சந்திரிகாவிற்கு எழுதிய கடிதம் வெளிப்படுத்துவதாய் உள்ளது.

இந்தியாவைப்பொறுத்து சனாதிபதி சந்திரிகாவின் முயற்சிகளுக்கு ஆதரவு வழங்கவேண்டும் என்ற நிலைப்பாடுடன் கூடியளவில் உள்ளது போன்றே தெரிகிறது. ஆனால் ரணில் விக்கிரமசிங்கவோ, சனாதிபதி சந்திரிகாவின் நிலைப்பாடுடன் ஒத்திசைவான நிலைப்பாடு கொண்டவராகத் தன்னை மாற்றிக் கொள்ளுதல் வேண்டும். ஆனால் இந்தியாவிடம் இருந்து ஏதாவது சங்கடமான கோரிக்கை வராமல் தடுப்பதே ரணில் விக்கிரமசிங்கவின் கடிதத்தின் நோக்கமாகும்.

இந்த வகையில் ரணில் விக்கிரமசிங்கவின் தற்போதைய கடிதமானது ஐ.தே.கட்சியின் நிலைப்பாடு குறித்துத் தெளிவான விளக்கத்தை வெளிப்படுத்தும் ஒன்றாகவே கொள்ளத்தக்கது. அதாவது ஒரு புறத்தில் தமது நிலைப்பாட்டையும், மறுபுறத்தில் தம்மீது நிர்ப்பந்தங்கள் எழுவதைத் தவிர்ப்பதற்கானதாகவும் உள்ளது. அந்த வகையில் பார்க்கையில் இதனை எதிர்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் இராஜதந்திர நகர்வு என்று கூடக்கூறலாம்.

## அமைச்சர் ஒருவரின் மனைவி மீதான கொலைக்குற்றச்சாட்டு விசாரணை ஆரம்பம்

(கொழும்பு)

சிறிலங்காவில் அமைச்சர் ஒருவரின் மனைவி மீதுள்ள கொலைக்குற்றச்சாட்டு மீதான விசாரணை உயர் நீதிமன்ற நீதிபதியின் உத்தரவின் பேரில் நேற்று ஆரம்பமானது.

கிறிஸ்தவ விவகார மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சரான மில்றோய் பெர்னாண்டோவின் மனைவியான மேரி யூலியற் மொனிக்கா பெர்னாண்டோ என்பவர் இரண்டு பெண்களைக் கடத்திச் சென்று கழுத்துநெரித்துக்கொலை செய்ததாகக் குற்றம் சாட்டப் பட்டுள்ளார்.

இக்கொலைகளில் அமைச்சரின் மனைவிக்கு உதவி புரிந்த வேறு மூன்று பெண்களும் குற்றவாளிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

பகலவத்தயைச் சேர்ந்த திரேஷா என்ற பெண்ணையும், அவரது வேலைக்காரியான சீலாவதி என்ற பெண்ணையும் 1992 ஆம் ஆண்டு சனவரி மூன்றாம் திகதி காரில் கடத்திச் சென்று கழுத்து நெரித்துக்கொலை செய்துவிட்டு அவர்களின் சடலங்களை வென்னப்புவப் பகுதியில் எரியூட்டியதாகவும், குறித்த நான்கு பெண்களுக்கு எதிராகவும் வென்னப்புவப் பொலிசாரால் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

இதன் பிரகாரம் சட்டமா அதிபர் திணைக்களத்தினால் தாக்கல் செய்யப்பட்ட குற்றப் பத்திரத்தின் அடிப்படையில் குறித்த நான்கு குற்றவாளிகளின் மீதான விசாரணை நேற்று நீதிபதிகள் குழுவொன்றின் முன்னிலையில் ஆரம்பமாகியது என "ஐலண்ட்" செய்தி ஒன்று கூறுகின்றது.

## சிறிலங்கா தொண்டர் படைக்கு பெண் சிப்பாய்கள் சேர்ப்பு

சிறிலங்கா இராணுவ தொண்டர் படைக்கு பெண் சிப்பாய்களை சேர்த்துக் கொள்வதற்கான நேர்முகத்தேர்வுவரும் வியாழக்கிழமை காலை 8மணி தொடக்கம் பிற்பகல் 5மணி வரை பத்தரமுல்லயில் உள்ள தொண்டர் படைத்தலைமையகத்தில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

விண்ணப்பதாரிகள் மண மாகாத, 18 தொடக்கம் 22 வயதிற்கு உட்பட்டவராகவும், ஐந்து அடிக்கு மேற்பட்ட உயரமுடையவராகவும் இருப்பதுடன், சிங்களம்,கணிதம் உட்பட க.பொ.த சாதாரண தரத்தில் ஆறுபாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும் என்னும் அந்த அறிவித்தலில் தெரிவிக்கப்பட்டுள்ளது "சன்டே ஒப்ஷேவர்" ஆங்கில வார இதழ் செய்தி வெளியிட்டுள்ளது.

## லஞ்சக்குற்றச் சாட்டின்கீழ் கைதான இராணுவ அதிகாரிக்குப் பிணை

லஞ்ச ஊழல் குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்ட இராணுவ மேஜர் ஜெனரல் சிசிர குமார விஜயசூரிய நேற்றும் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டார்.

கொழும்பு மாவட்ட பிரதான நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்ட இவரை 10,000 ரூபா ரொக்கப்பிணையிலும், 10 இலட்சம் சரீரப்பிணையிலும் செல்ல பிரதான நீதவான் சறோஜினி வீரவர்தன அனுமதியளித்தார். இராணுவத்துக்கு தேவையான பொருட்களை கொள்வனவு செய்த வேளையில், லஞ்சம் மற்றும் ஊழல் நடவடிக்கையில் ஈடுபட்டாரென்ற குற்றச்சாட்டின் பேரில் லஞ்ச ஊழல் தொடர்பான விசாரணை ஆணைக்குழு இவரைக் கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தியது. மேஜர் ஜெனரல் சிசிர குமார விஜயசூரிய தமது வருமானத்தை விட 19 இலட்ச ரூபா பெறுமதியானசொத்தை சேர்த்துள்ளமை குறித்து ஆணைக் குழுவிற்கு முறையாக விளக்கம் வழங்கத் தவறியதாக ஆணைக் குழு நீதிமன்றத்தில் அறிக்கை சமர்ப்பித்துள்ளது. மேஜர் ஜெனரலை பிணையில் செல்ல அனுமதித்த நீதவான், அவருக்கு வெளிநாடு செல்ல முடியாத வகையில் தடை உத்தரவொன்றையும் பிறப்பித்துள்ளார்.

## பேருந்து மோதி சிப்பாய் பலி

(கொழும்பு)

தனியார் இன்ரசிற்றி பேருந்து மோதி இராணுவச் சிப்பாய் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

அனுராதபுரம் - தம்புள்ள பிரதான வீதியில் உள்ள கெலத்தாவ இராணுவ முகாமின் முன்னால் இடம்பெற்ற இவ்விபத்தில் சிறில் கங்ககெதர (வயது - 30) என்ற சிப்பாயே உயிரிழந்தார்.

புதிதாக சேர்த்துக் கொள்ளப்பட்ட இச்சிப்பாய் பயிற்சியை முடித்துக் கொண்ட பின் வீடு திரும்புவதற்காக நின்றிருந்த போதே இவ்விபத்து நேரிட்டதாகவும், குறித்த பேருந்தின் சாரதி தனக்கு அனுமதிப்பத்திரம் இல்லாமையால் நடத்துநரைக் கொண்டே பேருந்தை ஓட்டி வந்ததாகவும், பேருந்தின் அளவுக்கு மீறிய வேகமே விபத்திற்குக் காரணம் என்றும் தெரிவிக்கப்படுவதாக டெய்லி மிரர் செய்தி வெளியிட்டுள்ளது.

## பிரதி அமைச்சர்களாக நால்வர் பதவியேற்பு

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்தில் மேலும் நான்கு பிரதி அமைச்சர்களின் பதவிப்பிரமாண நிகழ்வுகள் சனாதிபதி மாளிகையில் நேற்று இடம் பெற்றுள்ளன. சமூகநல பிரதி அமைச்சராக எஸ். எம் சந்திரசேன. புனர்வாழ்வுத்துறை பிரதி அமைச்சராக மேவின் சில்வா, தொழில்துறை பயிற்சி பிரதி அமைச்சராக த மு தஸநாயக்க மற்றும் கிழக்கு மாகாண பிரதி அமைச்சராக உசைன் அகமட் பைலா ஆகியோரே இவ் பதவிப் பிரமாணநிகழ்வில் கலந்து கொண்டுள்ளனர். இந்த நிலையில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பிரதான கட்சியான சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் சார்பில் பாராளுமன்ற உறுப்பினர் விஜயதாஸ ராஜபக்ஷ மட்டுமே பிரதி அமைச்சாராகவோ அல்லது அமைச்சராகவோ பதவியேற்கவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது. (32)

### வேட்பாளரை நியமிக்கவில்லை

ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகம் பதவிக்கான வேட்பாளரை நியமிப்பதில் சிறிலங்கா அரசங்கம் ஈடுபாடு காட்டவில்லை என வெளிநாட்டமைச்சு சகல வெளிநாட்டுத் தூதுக் குழுக்களும் அறிவித்துள்ளது.

எனினும் குறித்த பதவிக்காக ஆசிய நாடொன்றில் இருந்து நியமிக்கப்படும் வேட்பாளருக்கு விரிவான ஆதரவை வழங்கப் போவதாகவும் வெளிநாட்டமைச்சர் அந்த அறிவிப்பில் கூறியுள்ளது.

ஐக்கியதேசியமுன்னணி ஆட்சிக் காலத்தில் வெளிநாட்டமைச்சராக இருந்த டிரோன் பெர்னாண்டோ மேற்படி பதவிக்கான வேட்பாளராக தெரிவு செய்யப்பட்டிருந்த போதிலும் பின் அது வாபஸ் பெறப்பட்டது.

## போக்குவரத்து நெரிசலைக்கட்டுப்படுத்த கொழும்பில் ஒரு வழிப்போக்குவரத்து முறை

(கொழும்பு)

கொழும்பில் போக்குவரத்து நெரிசலை கட்டுப்படுத்தும் ஒரு வழிப் போக்குவரத்து முறை நேற்றுமுதல் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. பம்பலப்பிட்டி டிக்மன்ஸ் வீதிச் சந்தியில் இருந்து கொள்ளுப்பிட்டி சந்தி வரை காலி வீதியினூடக கொழும்பு நோக்கிய ஒருவழிப் போக்குவரத்துக்கு ஏற்பாடுசெய்யப்பட்டுள்ளது. கொழும்பிலிருந்து வரும் வாகனங்கள் கொள்ளுப்பிட்டி லிபேர்டி சுற்று வட்டத்தில் இருந்து பம்பலப்பிட்டி வரை டுப்பிளிகேசன் வீதி ஊடான ஒருவழிப் போக்குவரத்துக்கு அனுமதிக்கப்பட்டுள்ளது. காலி வீதியின் இடது பக்க ஒழுங்கையில் பயணிகள் பேருந்துகளுக்கான பாதை ஏற்படுத்தப்பட்டுள்ளது. கொழும்பிலிருந்து வரும் பேருந்துகளுக்குரிய தரிப்பிடங்கள் டுப்பிளிக்கேசன் வீதியில் அமைக்கப்பட்டுள்ளன. இந்த இரு பெரும் பாதைகளுக்கும் இடையிலான போக்குவரத்துக்களுக்கு குறுக்கு வீதிகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.இவை ஒருவழிப் போக்குவரத்துக்கு ஏற்ற வகையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்த புதிய நடைமுறையை ஒழுங்குபடுத்துவதற்காக பொலிஸ் போக்குவரத்து கண்காணிப்பு பிரிவு பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளது. இந்த நடைமுறை மூலம் காலி வீதியின் போக்குவரத்து நெருக்கடி பெருமளவு கட்டுப்படுத்தப்பட்டும் விரைவான பயணத்தை மேற்கொள்ளக்கூடிய நிலை ஏற்படும் என நம்பிக்கை வெளியிடப்பட்டுள்ளது. (32)

# வவு.கல்வியியல் கல்லூரியை மூன்று வாரகாலம் மூட அறிவுரை

## -சுகாதார சீர்கேட்டால் பல மாணவர் வைத்தியசாலையில்

வவுனியா பூந்தோட்ட கல்வியல் கல்லூரியினை மூன்று வார காலத்திற்கு மூடுமாறு வவு னியா சுகாதார பிரிவினர் அறி வுரை வழங்கியுள்ளனர். கல்வியல் கல்லூரியில் சுகாதார சீர்கேடுகாரணமாகவே கல்வி கற்கும் மாணவர்களுக்கு தொற்று நோய் ஏற்றப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது அத்துடன் மலசல கூடத்தின் கழிவுகள் வெளியில் கசிவு ஏற்பட்டு இருப்பதன் ' காரணமாக அங்கு கல்வி பயின்று வரும் மாணவர்களில் பலர் வயிற்றோட்ட நோய்க்கு பாதிப்புக்குள்ளாகியுள்ளனர். வவுனியா பூந்தோட்டம் கல்வியல் கல்லூரியில் கல்வி கற்றுவரும் 70இற்கு மேற்பட்ட ஆசிரியர், மாணவர்கள் வயிற்றுளைவு காரணமாக வவுனியா பொது மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக வைத்தியசாலை தரப்பினர் தெரிவிக்கின்றனர் பூந்தோட்டம் கல்வியல் கல்லூரியில் உள்ள சுகாதார சீர்கேடே இதற்கான காரணம் என்று தெரிவிக்கப்படுகின்ற போதும் அதனை பார்வையிட சென்ற பத்திரிகையாளர்களுக்கு அனுமதி வழங்கப்படவில்லை நேற்று முன்தினம் இரவும், நேற்றுக் காலையும் அதிகளவான நோயாளர்கள் அனுமதிக்கப்படுவதன் காரணமாக நோயாளர் விடுதியில் இடம் பற்றாக்குறை ஏற்பட்டு இருப்பதாக வவுனியா பொது மருத்துவமனையின் வைத்திய அத்தியட்சகர் சத்தியலிங்கம் தெரிவித்தார் இந்த நோயின் பாதிப்புக்குள்ளான மாணவர்கள் தொடர்சியாக வவுனியா பொது மருத்துவமனையிலும் தனியார் மருத்துவமனைகளிலும் அனுமதிக்கப்பட்டு வருகின்றார்கள் இது தொடர்பாக கல்வியல் கல்லூரியில் தொடர்பு கொண்ட போதும் தொடர்புகள் எதுவும் கிடைக்கவில்லை நேற்று மாலை வவுனியா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த பலரும் வீடுகளுக்கு சென்று விட்டனர் வவுனியா சுகாதார பிரிவின் வைத்திய குழுவினர் அங்குள்ள சுகாதார நிலைகள் தொடர்பாக ஆராய்ந்துள்ளனர். (21,10)

# 2 ஆம் லெப். மாலதி நினைவாக 175 புகைக் கூண்டுகள் விடப்பட்டன

(அலுவலக செய்தியாளர்)

தமிழீழ காவல் துறையின் சிறப்பு ஏற்பாட்டில் வல்வெட்டித்துறை நெடியகாடு மக்களால் நேற்று முன்தினம் கிளி.மத்திய



மைதானத்தில் நடைபெற்ற தமிழீழ மகளிர் எழுச்சி நாள் நிகழ்வில் 175 புகைக் கூண்டுகள் வானை நோக்கி விடப்பட்டன.

தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றில் முதல் வித்தாகிய 2 ஆம் லெப். மாலதியின் 17 ஆம் ஆண்டைக் குறிக்கும் முகமாக ஒரு தொகுதிப் புகைக்கூண்டுகள் 17 கொண்டவையாக விடப்பட்டன. படத்தில் தமிழீழக் காவல் துறையின் குற்றப்புலனாய்வுத் துறைப் பொறுப்பாளர் கானகன் அவர்கள் வெளிச்சவீடு ஒன்றை விடுவதைக் காணலாம். (லோ)

# யாழ்.கைதடிப்பாலத்தில் பாரஊர்தி தடம் புரண்டது

(யாழ்ப்பாணம்)

யாழ்பாணம் நோக்கிச் சென்று கொண்டிருந்த கொள்கலன் பொருத



(படம்:செல்வா)

திய பாரஊர்தி ஒன்று நேற்று மதியம் 12.30 மணியளவில் கைதடிப் பாலத்தில் தடம் புரண்டது.

பாரஊர்தியில் பொருத்தப்பட்டிருந்த கொள்கலனும், பாரஊர்தியும் பலத்த சேதமடைந்தன. கொள்கலனில் ஏற்றி வந்த சீமெந்துப் பைகளும் இதில் சேதமடைந்தன. இச்சம்பவத்தில் பாரஊர்தியின் சாரதியான சிவபாதம் குணபாலசிங்கம் (வயது-28 பளை) தலையில் படுகாயமடைந்தார்.

பாலத்தின் திருத்த வேலைக்காக பாலத்தின் கீழ் இருந்த மண் அணையின் ஒரு பகுதி சிறிது சிறிதாக ஏற்கனவே அகற்றப்பட்டிருந்தது. இதன் காரணமாகவே பாலத்தின் மேலால் சென்ற இப் பாரஊர்தி தடம் புரண்டதாகத் தெரிவிக்கப்பட்டது. பாலத்தின் திருத்த வேலைகள் முடியும் வரை பாலத்தின் அருகாகப் போடப்பட்ட தற்காலிக பாலத்தின் ஊடாகவே வாகனங்கள் செல்லும் எனவும் தெரிவிக்கப்பட்டது. (செ)


# பத்துப்போராளிகள் இன்று பிணையில் விடுவிக்கப்படுவர்

திருகோணமலை கோமரங்கடவலவில் கைது செய்யப்பட்ட இரண்டு ஊர்காவல் படையினரையும் விடுதலை செய்வதற்காக தமிழீழ விடுதலைப்புலிகள் கோரிய 8 பேர் அண்மையில் பிணையில் செல்ல கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றம் அனுமதியை வழங்கியுள்ளது மேலும் இருவருக்கு நேற்றுப் பிணை அனுமதி வழங்கப்பட்டுள்ளது. எனவே இதனைக் கருத்திற் கொண்டு குறிப்பிட்ட இரண்டு ஊர்காவல படையினர் தமிழீழ விடுதலைப்புலிகளால் விடுவிக்கப்படுவர் என பொதுமக்கள் பாதுகாப்புத் துறை அமைச்சின் செயலர் திலக் ரணவிராஜா நம்பிக்கை வெளியிட்டார் இதேவேளை மேன்முறையீட்டு நீதிமன்றத்தால் பிணை அனுமதி வழங்கப்பட்டதாகக் கூறப்படும் 10 போராளிகளும் தற்சமயம் மட்டக்களப்பு சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருப்பதால் அவர்கள் இன்று மட்டக்களப்பு நீதிமன்றத்தில் ஆஜர்செய்யப்பட்டு பிணையில் செல்ல அனுமதிக்கப்படுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

# அநாதரவாகக் காணப்பட்ட உந்துருளி காவல் பணிமனையில்

(அலுவலக செய்தியாளர்)

அநாதரவான நிலையில் கைவிடப்பட்டிருந்த "சாளி"ரக உந்துருளி ஒன்று மீட்கப்பெற்று கிளிநொச்சி காவல் பணிமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.



நேற்று முன்தினம் இரவு 11.00 மணியளவில் கிளிநொச்சி பழைய புகையிரத வீதியருகாமையில் பள்ளத்திலிருந்து பச்சை நிற சாளி ரக உந்துருளி ஒன்று அநாதரவான நிலையில் இருந்ததை அவதானித்த வீதியால் சென்ற ஒருவர் மேற்படி உந்துருளியினை கிளி.காவல் நிலையத்திற்கு எடுத்துச் சென்று ஒப்படைத்துள்ளார்.

உந்துருளி தற்போது கிளிநொச்சி காவல்பணிமனையினரின் பாதுகாப்பில் வைக்கப்பெற்றுள்ளது.

நேற்று மாலைவரை உந்துருளி காணாமல் போயுள்ளது தொடர்பாக எவரும் கிளி. காவல் பணிமனையில் முறையீடு செய்யவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (சோ,கு)

### லெப்.கேணல்...

மேலும் பொதுமக்களை 500 பேருக்கு மேல் நிகழ்வில் கலந்து கொள்ளக் கூடாது என்றும் சுலோக அட்டைகள் ஏந்திச் செல்லக் கூடாது என்றும் உறுதி உரைகள் எழுப்பக் கூடாது என்றும் பொலிசார் பொதுமக்களுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

### மார்க்கன்...

கியத்தை சீர் குலைத்து சமாதான சூழ்நிலையைச் சிதைத்தளிக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்துள்ளனர்.இக் குழுவினரே ஸ்ரீ லங்கா இராணுவத்தின் பக்கபலத்துடன் வாகரை, மாங்கேணி, பனிச்சங்கேணி பகுதிகளில ஆங்காங்கே சிறு சிறு தாக்குதல்களை மேற் கொன்டவர்கள் இவர்கள் மேல் தமிழீழ விடுதலைப் புலிகள் மேற் கொன்ட அதிரடித் திடீர் தாக்குதலால் தேசத் துரோகி கருணாவின் துரோகத்தனம் அனைவருக்கும் தெட்டத் தெளிவாக தெரிய வந்துள்ளது. சமாதானத்தை நேசிக்கும் அனைவரும் தமிழ் தேசியத்தை சிதைக்க முயல்வோரை இனங் கண்டு தமிழீழ விடுலைப்புலிகளுக்கு உறுதுணையாகவும் பக்க பலமாகவும் இருந்து சமாதானத்தை முனனெடுத்துச் செல்வதற்கு திட சங்கற்பம் கொள்வோம் என அந்த அறிக்கை கூறுகின்றது.

இதேவேளை கொல்லப்பட்டவர்கள் வாகரை மதுரங்குளத்தைச் சேர்ந்த குணராசா ராஜேந்திரன் மற்றும் பொலநறுவை சேருவிலவைச் சேர்ந்த ரவிக்குமார் அல்லது ஜூட் என அடையாளம் காணப்பட்டுள்ளார்கள் காயமடைந்தவர்களான தவராசா கணபதி மூர்த்தி, கணபதிப்பிள்ளை ரவி, நல்லையா சிவராசா, கணபதிப் பிள்ளை சின்னராசா, ராஜன் அல்லது ராஜா ஆகிய 5 பேரும் பொலநறுவை வைத்தியசாலையிலிருந்து நேற்று நண்பகல் கொழும்பு தேசிய வைத்தியசாலைக்குப் பலத்த பாதுகாப்புடன் மாற்றப்பட்டுள்ளார்கள். இவர்கள் தங்கியிருந்த இடத்திலிருந்து ரி 56 ரக துப்பாக்கிகள் -04 கிரனைட்கள் 02, 9 எம் .எம் . ரக பிஸ்ரல் -01 என்பன கைப்பற்றப்பட்டுள்ளதாகவும் பொலிசார் கூறுகின்றனர்.

### வீர

ளியே வீரச்சாவடைந்தவராவார்.

இவருக்குத் தமிழீழ விடுதலைப்புலிகள் வீரவணக்கம் செலுத்துகின்றனர்.

### இந்தியாவைக்...

படுகிறது.

இதன் விளைவே எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்வையும், சனாதிபதி சந்திரிகாவையும் இந்தியா உத்தியோக பூர்வமாக டில்லிக்கு அழைத்துப் பேச முற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இத்தகைய சந்திப்பொன்றை ஏற்றே எதிர்க்கட்சித் தலைவர் ரண விக்கிரமசிங்க இந்தியா சென்றிருப்பதாகவும், சனாதிபதி சந்திரிகா இருவாரங்களின் பின் இந்தியா செல்லவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (32)

### மல்வத்த.....

தாகவும் தெரிவித்துள்ளார் எனினும் அஸ்கிரிய பீடாதிபதி இவர்களைச் சந்திக்க மறுத்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இதற்கான நேரம் தனக்கு தற்போதைக்கு இல்லை என அவர் தெரிவித்துள்ளார். இதேவேளை தமிழ்க் கூட்டமைப்பினரின் சந்திப்புக்கு எதிராக கண்டியில் பல இடங்களில் கறுப்புக் கொடிகள் பறக்கவிடப்பட்டதாகவும் எதிர்ப்பு நடவடிக்கைகளில் சில கடும்போக்காளர்கள் ஈடுபட்டுள்ளதாகவும் சுரேஸ் பிறேமச்சந்திரன் தெரிவித்தார். புத்த பிக்குகள் உள்ளிட்ட 25 பேருக்கு மேற்பட்டோர் தமது வாகனங்களைத் தடுத்துக் குடைகளால் வாகனங்களைக் குத்திக் கோஷமிட்டதாகவும் தெரிவித்துள்ளார். இதே வேளை நாட்டை பிரிவினைக்கு இட்டுச் செல்லும் தமிழீழ விடுதலைப்புலிகளின் இடைக்கால தன்னாட்சி அதிகார சபையை தாம் ஏற்றுக்கொள்ளப் போவதில்லை என மல்வத்த மகா நாயக்கர் திப்பட்டுவாவே சுமங்கல ஏற்கனவே தெரிவித்திருந்தார்.(32)

### கப்டன்...

தேசவிரோதக் கும்பல்கள் எமது சகோதர சமூகத்திற்குள் முரண்பாட்டை ஏற்படுத்தி அரசியல் இலாபம் தேடி சமாானத்தைக் குழப்ப முற்படுகின்றனர்.

எனவே நாம் அனைவரும் விழிப்பாய் இருந்து எமது தேசியத்தைக் கட்டியெழுப்பி சமாதானத்தை முன்னெடுக்க வழி சமைப்போம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### விதார்....

நரசிம்மராவ் ஆகியோரையும் அவர் சந்திக்கவுள்ளார்.

இந்தியத் தலைவர்களுடன் அகன்ற கோணத்திலான ஆலோசனைகளைக் குறியாகக் கொண்ட "செயற்பாடான விஜயம்" என ரணிலின் விஜயத்தை இலங்கை அரசியல் வட்டாரங்கள் விபரித்துள்ளன.

நோர்வேயின் அனுசரணையுடனான சமாதான முயற்சிக்கு புதுடில்லியின் ஆதரவு இன்றியமையாதது இலங்கை அரசியல் கட்சிகள் கருதுகின்றன.

நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சர், வெளிவிவகாரங்களுக்கான இராஜாங்க அமைச்சர் ராவ் இந்திரஜித்சிங்கை சந்தித்துப் பேச்சுக்கள் நடாத்துவார் என அவதானிகள் தெரிவிப்பதாக இணையத் தளச் செய்தியொன்று கூறுகின்றது.

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2004 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 12 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.